விமோசனம்

தொகுதி 1	சுக்ல ௵ மாசி ௴	பகுதி 7



கள்ளென்னும் கபந்தனின் பிரமாண்டமான கையில் அகப்பட்டு இந்தியு மக்கள் நசுக்கப்படுகிறார்கள். இரத்தம் சிந்துவதைப் பாருங்கள். அவ்வரக்கனை உடனே கொன்று அவனுடைய பிடியிலிருந்து ஜனங்களை விடுவிக்கும் முயற்சிக்குத் துணைபுரியுங்கள். உயிர்டோகும் வரையில் காத்திருக்க வேண்டாம்.

தபாலைத் தடுத்தால் துக்கம் தீருமா?

முனிசாமிக்குத் தன் அருமை மகனைப் பற்றி துக்க சமாசாரம் கொண்ட ஒரு கடிதம் வருகிறது. அதைக் கொண்டுவரும் தபால்காரனைத் தடுத்துக் கடிதத்தைப் பிடுங்கிக் கிழித்து எறிந்து போட்டு முனிசாமிக்கு சமாசாரம் எட்டாமல் செய்துவிட்டால் அந்த துக்கம் தீர்ந்து போய்விடுமா? மகன் தான் போயிருந்த இடத்தில் தேக சுகமில்லாமல் இறந்து போகிறான். அல்லது கடன்பட்டு உணவின்றி அலைந்து துன்பப் படுகிறான். இந்தச் செய்தி தகப்பனுக்குச் சேராமல் போனதினால் அந்த துக்கமே இல்லாமற் போய்விடுமா?



நம்முடைய தேகத்தில் தபாலாபீஸைப் போல் வேலை செய்வது மூளை. அதுதான் பல விஷயங்களையும் நம்முடைய அறிவுக்கும் உணர்ச்சிக்கும் தவறாமல் கொண்டுவரும் சிறந்த தபால்-தந்தி ஆபீஸ் ஆகும். தபாலாபீசின் பந்தோபஸ்துக்கு வெளிச்சுவர் இருப்பது போல, மூளை யென்னும் ஒப்பற்ற இயந்திரம் எவ்வித சேதமு மடையாதபடி எலும்பினாலான கபால ஓட்டுக்குள் அது பத்திரமாய் அமைக்கப் பட்டிருக்கிறது. இவ்வளவு பத்திரப் படுத்தி யிருந்தபோதிலும் புத்தியில்லாத மனிதன் அதைக்கெடுக்க வழி தேடுகிறான்.

வயிற்றுக்குள் சாராயமும், கள்ளும், அபினியும் செலுத்தி உள் வழியாக மூளைக்கு விஷம் ஏற்றுவித்து அதைப் பாழ்படுத்தித் தன் வேலையை சரியாகச்செய்ய முடியாமல் பண்ணுகிறான் புத்தி கெட்ட மனிதன். தபாலாபீசுக்குள் கள்ளர் கன்னம் வைத்துப் புகுந்து, உள்ளே வேலை செய்யும் தபாலதிகாரியைக் கொன்று, வேலைக்காரர்களை அடித்துத் துரத்திவிட்டு, வந்த கடிதங்களையும் போகும் கடிதங்களையும் கிழித்து நாசமாக்கி, பணத்தைக் கொள்ளை கொண்டுபோவது போல, மதுபானமானது குடித்தவனுடைய மூளையென்னும் ஒப்பற்ற தபாலாபீசுக்குள் சுரங்கம்

வைத்து உள்வழியாய்ப் புகுந்து, அங்கே தலைமை அதிகாரியான 'விவேகம்' என்பதைக் கொன்று, எண்ணங்களையும் செய்கைகளையும் மாற்றி, அறிவைக் கொள்ளை கொண்டுபோய் வாழ்வையே நாசப்படுத்தி விடுகிறது.

இவ்விதக் கொலை பாதகனும், கொள்ளைக் காரனுமான கள்ளை உள்ளே விடாதீர்கள். கொஞ்சம் இடங்கொடுத்தால் பிறகு நம்மை அவன் விடான்.

உடலில் எங்கேயாவது கெடுதல் ஏற்பட்டால் துன்ப மடைந்த அங்கத்தினின்று மூளைக்குத் தபால் செல்கிறது. இதைத்தான் வலி என்று சொல்கிறோம். தபால்காரனை வழி மறித்து மூளைக்கு வலி என்னும் உணர்ச்சி தெரியாமல் செய்துவிட்டால், துன்பப் பட்ட அங்கத்திற்கு ஏதாவது நன்மையுண்டாகுமா ? கஷ்டம் தீருமா ? கிடையவே கிடையாது. எஜமானனாகிய புத்திக்கு சமாசாரம் எட்டாமல் போனது ஒன்றே யொழிய அங்கத்திலுள்ள குறையும், இரத்த ஓட்டத்தில் உண்டான நெருக்கடியும் அப்படியே தான் இருக்கும். மகனுக்குப் பெருந் துன்பமும் கஷ்டமும் உண்டானதைத் தெரிந்துகொள்ள இஷ்டமில்லாமல் கடிதம் கொண்டுவரும் தபால்காரனை விரட்டி யோட்டிவிட்டு, சிரித்துக் கூத்தாடி விளையாடிக் கொண்டோ அல்லது கீழே கிடந்து தூங்கிக் கொண்டோயிருக்கும் பெரும் மூர்க்கன் செயலை என்னென்று மதிப்பீர்கள் ? இது போன்றதே தான் உடல்வலி போகுமென்னுவது, மனோ வியாகூலம் தீருமென்னுவது கள்ளும் சாராயமும் குடிக்கும் மூடன் செயல்.

ஒரு நாள் கடிதத்தைக் கிழித்தெறியலாம். இரண்டாம் நாள் தபால்காரனைப் பார்த்துப் "போ! எனக்குக் கடிதம் வேண்டாம்" என்று சொல்லிவிடலாம். மூன்றும் நாள் அவனை யடித்தே துரத்திவிடலாம். பிறகு ஊரார் எல்லாம் சேர்ந்து தபாலாபீஸையே இடித்தும் கொளுத்தியும் விடலாம். இதனாலெல்லாம் துக்கங்கள் தீர்ந்து போமா? உண்மையில் துக்கத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமானால் குடித்து மயக்கமடைவதினால் அது ஆகாத காரியம்; நல்ல முயற்சியினாலும் தெளிந்த அறிவினாலுந் தான் நாம் சுகமடையலாம்.



மதுவிலக்கு ஆத்திசூடி

[ஸ்ரீமான் சதாசிவம்]

மது —

1. அறிவைக் கெடுக்கும்.
2. ஆயுளைக் குறைக்கும்.
3. இழிவைக் கொடுக்கும்.

மதுவை உண்டால் —

4. ஈசனருள் குறையும்.
5. உணர்ச்சி அழிவுறும்.
6. **ஊ**ரெலாம் பழிக்கும்.

ஆதலால் இது —

7. எவர்க்கும் கெடுதி.

ஏனெனில் —

8. ஏழ்மையைக் கொடுக்கும்.
9. ஐம்புலனழியும்.

இனி —

10. ஒருதரமும் குடியேல்.
11. ஓதுவாய் "விமோசனம்!"

கவர்னர் வண்டி

[ரா. கி.]

I

மறுநாள் தீபாவளி, தலையாரி முத்துவின் பெண்சாதி, பணியாரம் சுடுவதற்காக மாவு அரைத்துக்கொண்டிருந்தாள். மகன் சின்னனும், மகள் அஞ்சலையும் ஓர் உடைந்த தகரப்பெட்டியைத் திறப்பதும் மூடுவதுமா யிருந்தார்கள். அந்தப் பெட்டியில் தீபாவளிக்காக வாங்கி வந்த புது வேட்டியும், பாவாடையும், இரண்டு மூன்று பட்டாசுக் கட்டுகளும் இருந்தன. ஒரு பட்டாசுக் கட்டை இப்போதே பிரித்துவிட வேண்டுமென்று சின்னான் சொன்னான். அஞ்சலை "கூடாது, நாளைக் காலையில் தான் பிரிக்கவேண்டும்" என்றாள்.

தலையாரி முத்து அவசரமாய் உள்ளே நுழைந்தான். "நான் போய்த் தொலையவேண்டும். இந்தப் பாழும் சர்க்கார் உத்தியோகம் இப்படித்தான். நாள், கிழமைகூடக் கிடையாது" என்றான்.

"ஐயோ! இதென்ன அநியாயம்? எங்கே போகவேண்டும்? அதெல்லாம் முடியாது. இராத்திரி எப்படியும் வந்துவிட வேண்டும்" என்றாள் அவள் மனைவி மதுரம்மா.

"நான் என்ன செய்யட்டும்? யாரோ கவர்னர் துரை வருகிறானாம். ரயில் பாதை முழுதும் காவல் காக்க வேண்டுமாம். கணக்குப்பிள்ளை, மணியக்காரர், வெட்டி தலையாரி எல்லாரும் போகிறார்கள். இந்தத் தாலூகா முழுதும் அப்படி. ரிவினியூ இன்ஸ்பெக்டர் ஐயா கூடத் தடியைப் பிடித்துக்கொண்டு காவல் காப்பாராம்" என்று சொல்லி முத்து சிரித்தான்: ரிவினியூ இன்ஸ்பெக்டரை அத்தகைய நிலைமையில் எண்ணிப் பார்த்தபோதே அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"அது எப்படியாவது பாழாய்ப்போகட்டும். பண்டிகையன்று தானா இந்த எழவு வந்து தொலைய வேண்டும்? எப்படியும் இராத்திரி திரும்பி வந்துவிடக் கூடாதா? ஐயோ! கொள்ளைப் பணியாரம் செய்ய மாவு அரைத்திருக்கிறேனே? நீ இல்லாமற்போனால் சந்தோஷமாகவே இராது" என்றாள் மதுரம்.

"இராத்திரி வரப்போகிறாராம் துரை. அதற்கு சாயங்கால முதல் காவல் காக்கவேண்டுமாம். வண்டி போனவுடனே புறப்பட்டு ஓடி வந்துவிடுகிறேன். எட்டு மைல் இருக்கிறது. எப்படியும் பொழுது விடிவதற்குள் வந்துவிடுகிறேன்" என்றான் முத்து.

இதற்குள் அஞ்சலை ஓடிவந்து தகப்பன் கையைப் பிடித்துக்கொண்டு, "அப்பா, அப்பா, எனக்குப் பூ மத்தாப்பு வாங்கிக்கொண்டுவா" என்றாள்.



சின்னன் ஓடிவந்து அரைவேட்டியைப் பிடித்து "அப்பா, எனக்குத் துப்பாக்கி வாங்கி வரவேண்டும். வருகிறாயா, சொல்லு. இல்லாவிடில் உன்னை விட மாட்டேன்" என்று சொல்லி முத்துவின் வேட்டியைத் தன் மீது சுற்றிக் கொண்டான்.

"பணியாரமெல்லாம் ஆறிப்போகும். சுடச்சுடத் தின்றால் தானே தேங்காயப்பம் நன்றாயிருக்கும்? உனக்குப் பிடிக்குமே? நீ போகாதிருந்துவிட்டாலென்ன? உடம்பு காயலாவென்று சொல்லிவிடேன்" என்றாள் மதுரம்.

"ஐயோ! தலைபோய்விடும். இருபது வருஷமாய் வேலை பார்த்துவிட்டு இப்போது கெட்ட பெயர் எடுக்கலாமா? இந்தக் காலத்தில் மாதம் எட்டு ரூபாய் யார் கொடுக்கிறார்கள்? ஸர்க்கார் உத்தியோகம் இலேசா?" என்றான் முத்து. தான் சர்க்கார் உத்தியோகஸ்தன் என்னும் விஷயத்தில் அவனுக்கு எப்போதுமே கொஞ்சம் பெருமை யுண்டு.

பிறகு, மத்தாப்புப் பெட்டியும், விளையாட்டுத் துப்பாக்கியும் வாங்கி வருவதாகக் குழந்தைகளுக்கு வாக்களித்துவிட்டு முத்து புறப்பட்டுச் சென்றான்.

2

ஐப்பசி மாதத்து அடைமழை. வானம் ஓயாது கருத்து இருண்டிருந்தது. பகலிலேயே வெளிச்சம் சொற்பம். இரவில் சொல்ல வேண்டியதில்லை. ஆனல் அந்த அந்தகாரத்தினிடையே ஒவ்வொரு சமயம் மின்னல் பளிச்சென்று வீசி ஒரு கணநேரம் பிரகாச முண்டு பண்ணி வந்தது. சில சமயம் 'சோ' வென்று மழை கொட்டும். சில் சமயம் தூற்றல் போடும். அபூர்வமாக ஒவ்வொரு சமயம் தூற்றல் நிற்கும். ஆனல் ஊதல் காற்று மட்டும் இடைவிடாமல் அடித்துக்கொண்டிருந்தது.

அதோ வரிசையாக வெகு தூரத்துக்கு மின்மினிபோல் விளக்குகள் காணப்படுகின்றனவே, அவை யாவை? கம்பங்களில் நாட்டிய விளக்குகளா?—இல்லை. ரயில் பாதையின் இருபுறமும் சுமார் ஐம்பது கஜத்துக்கொருவர் வீதம் மனிதர்கள் நிற்கிறார்கள். அவர்கள் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் லாந்தர்கள் அவை. அப்படி நின்று கொண்டிருப்பவர்

களில் நமது தலையாரி முத்துவும் ஒருவன். ஒரு கையில் லாந்தரும் ஒரு கையில் தடியும் பிடித்துக்கொண் டிருக்கிறான். வாடைக்காற்று 'விர்' என்று அடிப்பதால் அவன் உடம்பு குளிரினால் 'வெட வெட' வென்று நடுங்குகிறது. பல் லுக் கிட்டுகிறது. மேலே மழைக்கு ஒரு கோணிப்பை. அது நன்றாய் நனைந்து போயிற்று. மழை கோணிப் பைக்குள் நுழைந்து முதுகுக்கு வந்து வெகு நேர மாயிற்று. உடுத்திய வேட்டியைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

சர்க்கார் உத்தியோகத்துக்குத் தலை முழுகிவிட்டு ஓடிப்போகலாமா என்று நினைத்தான் முத்து. மதுரம் சொன்ன புத்திமதியை அப்போதே கேட்காமற் போனேமே என்று வருந்தினான். இத்தனை நேரம் கஷ்டப் பட்டது பட்டோம், இனிக் கொஞ்ச நேரந்தானே, இருந்து தொலைப்போம் என்று தைரிய மடைந்தான். தன் மனைவி அப்போது சுடச்சுடச் பணி யாரம் செய்துகொண்டிருப்பா ளென்பது அடிக்கடி ஞாபகம் வந்தது. "போகட்டும், பெண்சாதியும் குழந்தைகளுமாவது தின்பார்களல்லவா ?" என்று எண்ணி ஆறுதல் அடைந்தான்.

இரவு ஏழு மணி, எட்டு மணி, ஒன்பது மணியு மாயிற்று. சாயங் காலம் நாலு மணிக்கு ஆரம்பித்த காவல். முத்துவுக்கு அந்த ஐந்து மணி நேரம் ஐந்து யுகமா யிருந்தது. "எது? இனிமேல் தாங்காது" என்று அவன் தீர்மானித்த சமயத்தில் அங்கே கையில் தாழங்குடையும், உடம்பில் கம்பளிச் சட்டையும், தலையில் குரங்குக் குல்லாவுந் தரித்து ஒருவர் வந்து சேர்ந்தார். அவர்தான் கிராமமுனிசீப் குருநாதப்பிள்ளை. ஊரில் பெரிய பண்ணைக்காரர் அவர்தான். நாற்பது வேலி நிலமும், ஒரு 'ல'காரம் ரொக்கமும் அவருக்குண்டு; ஆனாலும் தலையெழுத்து யாரை விட்டது ?

"முத்து, உஷார்! ஆயிற்று, இன்னும் அரை நாழிகைக்குள் வண்டி வந்து விடும்" என்றார் கிராமமுனிசீப்.

"எங்கப்பனாணை! இனிமேல் என்னால் முடியாது. நான் ஓடிப் போகிறேன், பிள்ளை !" என்று நடுங்கிக்கொண்டே சொன்னான் முத்து.

குருநாதப் பிள்ளைக்கு முத்துவின்மேல் நிரம்பப் பிரியம். வேலையில் எப்போதும் முத்து கொஞ்சம் இழுப்புதான். ஆனால் பொய், புனை சுருட்டு, திருட்டுப்புரட்டு என்பது அவனிடம் கிடையவே கிடையாது. ஒருவகையில் முத்துதான் கிராமமுனிசீப்புக்கு மந்திரி என்று சொல்ல

லாம். குருநாதப்பிள்ளையின் குடும்ப யோகக்ஷேமமெதுவும் முத்துவுக்குத் தெரியாததில்லை.

"அடே புத்திகெட்டவனே! இங்கேவா, நான் சொல்கிறதைக் கேளு" என்றார் முனிசீப்.

சட்டைப் பையிலிருந்து நாலணு எடுத்து முத்துவின் கையில் கொடுத்தார். "இதோ, பார்! உன் ஆசாரம், பக்தி, பூஜையெல்லாம் மூட்டை கட்டி வை. பக்கத்தில் அதோ கடையிருக்கிறது. போய் ஒரு புட்டி குடித்துவிட்டு வா. குளிரெல்லாம் பறந்து போய்விடும். அதுவரையில் நானே இங்கே பார்த்துக்கொள்கிறேன். ஓடி வந்து விடு" என்றார்.

முத்துவுக்கு இயற்கையாகவே குடியில் வெறுப்புண்டு. அவன் தெய்வபக்தி யுள்ளவன். கள்ளுக் குடித்தால் சுவாமிக்குக் கோபமுண்டாகும் என்ற எண்ணம் அவனுக்கு எப்படியோ ஏற்பட்டிருந்தது. அதிலும் அவன் மனைவி இது விஷயத்தில் மிகவும் கண்டிப்பாயிருந்தாள். ஒருநாள் அவன் கொஞ்சம் புத்தி பிசகி சகவாச தோஷத்தினல் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது மதுரம் படுத்தியபாடு நன்ருய் அவன் உள்ளத்தில் பதிந்திருந்தது. "கிணற்றில் விழுந்து உயிரை விடுகிறேன்" என்று அவள் ஓடியதும், அவளைத் தடுத்து நிறுத்தத் தான் பட்ட கஷ்டமும் அவனுக்கு ஞாபகம் இருந்தன. அது முதல் அவன் தப்பித்தவறிக்கூடக் கள்ளு சாராயக் கடைப் பக்கம் போவதில்லை. ஆனுல் இப்போதோ?...............

கிராம முனிசீப்பின் போதனையும், குளிரின் கொடுமையும் சேர்ந்து அவன் உறுதியை மாற்றிவிட்டன. "அவளுக்குத் தெரியப்போவதில்லை" என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டான். பணத்தை வாங்கிக்கொண்டுபோய் கால் மணி நேரத்தில் திரும்பி வந்தான்.

"அதுதான் சரி, முத்து! குளிரெல்லாம் பறந்து போயிற்றல்லவா? இன்னும் கொஞ்சம் பொறு. ஊருக்கே கிளம்பி விடலாம்" என்று சொல்லிவிட்டுக் குருநாதப்பிள்ளை தமது இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

3

முத்துவின் குளிர் பறந்துபோயிற்று. ஆனுல் அத்துடன் இன்னும் ஒன்றும் பறந்துவிட்டது. அது என்ன? உணர்ச்சி. உணர்ச்சி இருந்தாலல்லவா குளிர்தெரியும்? கொஞ்ச நேரத்துக்கெல்லாம் புத்தி தடுமாற ஆரம்பித்தது. பிறகு மயக்கம் அதிகமாயிற்று. உலகம் கிறு கிறுவென்று சுழன்றது. கையிலிருந்த விளக்கு கீழே விழுந்து உடைந்து அணைந்தது. ஒரு தந்திக் கம்பத்தைப் பிடித்துக்கொண்டு முத்து நின்ருன். கம்பம் கூட சரியாய் நிற்காமல் சுழல ஆரம்பித்தது. ஏற்கனவே காரிருள். இப்போது கண்ணும் இருண்டபடியால் கனந்தகார மாயிற்று.



திடீரென்று தூரத்திலே ஒரு பெரிய வெளிச்சம் காணப்பட்டது. ஐயோ! அதென்ன பேயா? பூதமா? ஆமாம், தெரிந்தது. கொள்ளி வாய்ப் பிசாசு! பயங்கரமான சத்தமிட்டுக்கொண்டு அது மேலே மேலே அதிவேகமாய் வந்து கொண்டிருந்தது. இதோ அருகில் வந்துவிட்டது. என்ன கொடிய பெரிய உருவம்! அதன் வாயில் எவ்வளவு பயங்கரமான தீ! ஐயோ! அது என்னை இழுக்கின்றதே! இதென்ன? நேரே அதன் வாயில் போய் விழுகிறேனே! ஓஹோ! மணியம்பிள்ளை! மாரியாயி!— ....அடுத்த கணத்தில் கவர்னர் துரையின் ஸ்பெஷல் வண்டி முத்துவின் உடம்பை ஆயிரந்துகளாகச் செய்துவிட்டுப் பறந்து சென்றது. முத்துவின் உயிரும் இப்பூவுலகை விட்டுப் பறந்துபோயிற்று.

"மேன்மை தங்கிய கவர்னர் துரையும் அவருடைய பரிவாரங்களும் சௌக்கியமாகத் துவரை நகரம் சேர்ந்தார்கள்" என்று மறுநாள் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று.

தலையாரி முத்துவின் மனைவி தீபாவளி யன்று காலையில் பணியாரம் செய்து வைத்துக்கொண்டு புருஷன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். சின்னானும், அஞ்சலையும் நிமிஷத்துக் கொருமுறை வாசலில் போய் மத்தாப்பூ, துப்பாக்கியுடன் அப்பன் வருகிறானென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

* * * *

சமீபத்தில் நான் மாயவரம் போனபோது, கிராம முனிசீப் குருநாதப்பிள்ளை யிடமிருந்து மேற் சொன்ன விவரங்களைக் கேட்டறிந்தேன். குருநாதப்பிள்ளை இப்போது மதுவிலக்கு இயக்கத்தில் பிசாசு பிடித்தவர்போல் வேலை செய்துவருகிறார். அவருடைய முயற்சியினாலேயே அந்த ஊர்க் கள்ளு சாராயக்கடைகள் ஏலம் எடுப்பாரின்றி மூடப்பட்டன. தற்போது அவரிடம் யாராவது சென்று கள்ளு, சாராயத்துக்கு சாதகமாக ஒரு வார்த்தை சொன்னால் அவர்கள் தப்பிப் பிழைத்துவருவது கஷ்டந்தான்.

பொய்யா மொழி

உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண் டொழுகுவார்.

கள்ளின்மீது ஆசைகொண்டு நடப்பவர் தங்கள் புகழை இழப்பர்; அவர்களிடம் அவர்களுடைய பகைவர்களுக்கு அச்சமிராது. (1)

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரால்
எண்ணப்பட வேண்டாதார்.

கள் குடிக்கவேண்டாம். பெரியோர்களால் மதிக்கப்பட வேண்டாதவர்களே கள்ளுண்பார்கள். (2)

ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென் மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

கள்ளுண்டு களித்தல் பெற்ற தாயும் பொறுக்க முடியாத குற்றமாகும். அங்ஙனமெனில் பெரியோர் முன்பு அக்குற்றம் செய்தால் அவர்களுக்குண்டாகும் அருவருப்பைப்பற்றிச் சொல்ல வேண்டுமா? (3)

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங் குற்றத்தார்க்கு.

கட்குடித்தல் என்னும் இகழத்தக்க பெருங் குற்றமுடையாரிடமிருந்து நாணமென்னும் லக்ஷ்மியானவள் விலகிப் போய்விடுவாள். அதாவது அவர்கள் நாணமற்றுப் போய்விடுவார்கள்; அதனால் துன்பமடைவார்கள். (4)

கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறியாமை கொளல்.

கள்ளுண்பது கைப் பொருளைக் கொடுத்து மெய்மறதியை வாங்கிக்கொள்வதாகும். முற் பிறப்பில் செய்த தீவினையினால் இவ்வறியாமை உண்டாகின்றது. (5)

துஞ்சினர் செத்தாரின் வேறல்ல ரெஞ் ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.

கள் குடித்து மயங்கிக் கிடப்பவர் இறந்தவரை யொத்தவரே யாவர். ஆதலின் எக்காலத்தும் கள்ளுண்பவர் விஷமுண்பவரே யாம். (6)

உள் ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள் ளொற்றிக் கண் சாய்பவர்.

கள்ளுண்பவன் அக்குற்றம் பிறருக்குத் தெரியாமல் ஒளிப்பது இயலாத காரியம். குடித்தவன் அறிவு மயங்கிக் கிடப்பதைப் பார்த்தவர் உண்மையறிந்து அவனைப் பரிகசிப்பார்கள். (7)

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

கள்ளை மறைவிடத்தில் குடித்துவிட்டு "நான் குடித்தறியேன்" என்று பாசாங்கு செய்ய முயலவேண்டாம். எனெனில் குடித்த குற்றத்துடன்கூட மனதிலுள்ள எல்லா இரகசியங்களும் வெளியே வந்துவிடும்.

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கள்ளானது பகுத்தறிவையே பாழாக்கி விடுகிறது. ஆதலின் கட்குடியனுக்குக் காரணங் காட்டித் தெளிவுண்டாக்குதல் இயலாத காரியம். இது நீரில் மூழ்கியவனைக் கையில் விளக்குப் பிடித்துத் தேடுதலையே யொக்கும். (9)

கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான் கொலுண்டதன் சோர்வு.

கள்ளுண்பவன் ஒருவன் தான் கள்ளுண்ணாமல் தெளிந்திருக்கும் காலத்தில் வேறொரு குடியனைப் பார்த்தானாயின், நானும் குடித்தபோது இவனைப்போல் தானே மதிமயங்கி யிருப்பேனென நினைத்துப்பாரான் போலும்! (10)

—திருக்குறள்; 93-ம் அதிகாரம்.

ரகுபதியின் பந்தயம்

[ஸ்ரீமதி நாமகிரி]

ஜானகி தன் பெயருக் கேற்ற அழகும் அறிவும் வாய்ந்தவள். ஒப்பற்ற தமது அருமை மகளுக்கு மணமகன் தேடுவது உமாபதிக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. ஓர் அரச குமாரனைக்கூட விலைகொடுத்து வாங்கக் கூடிய ஐசுவரியம் அவருக்கு இருந்தும் ஜானகிக்கேற்ற குணம், அழகு, அந்தஸ்து யாவும் பொருந்தியவன் அகப்படுவது எளிதாயில்லை. வயதுவந்த பெண்ணாகையால் அவள் விரும்பாத ஒருவனுக்கு அவளை மணம்புரிந்து கொடுத்துவிடவும் முடியாமலிருநதது. எங்கே தமது ஒரே மகள் விவாகமில்லாமலேயே யிருந்து விடுவாளோ வென்று உமாபதி மிகவும் திகில் கொண்டிருந்தார்.

உமாபதியின் பாலிய நண்பர் தனபதி என்று ஒருவர் இருந்தார். இவர் இருபது வருஷத்துக்கு முன்னால் தமது குடும்பத்துடன் கொழும்புக்குச் சென்றார். வியாபாரம் செய்து ஏராளமான பணம் சேர்த்துவிட்டுத் தனபதி இறந்துபோனார். இதற்குச் சில வருஷங்களுக்குப் பிறகு அவருடைய மகன் ரகுபதி திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தான்.

தமது அருமை நண்பரின் மகனை உமாபதி தம் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். ரகுபதியும் அடிக்கடி வரலானான். விரைவிலேயே அவன் அவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தான். ரகுபதி மிக்க நல்லொழுக்கமுடையவனாய்க் காணப்பட்டபடியால், உமாபதியும் ஜானகியும் அவனை மிகவும் நேசிக்கத் தொடங்கினார்கள்.

தமது எண்ணப்படி குணம், கல்வி, செல்வம் எல்லாம் ரகுபதியிடம் பொருந்தியிருக்கக் கண்ட உமாபதி அவனைத் தம் மருகனாய்க் கொள்ள நினைத்தார். இதைப் பற்றித் தம் புதல்வியின் மனதைப் பரீட்சித்ததில் அவளும் அவனிடம் பூரணமாய்க் காதல் கொண்டிருப்பதை யறிந்தார். நாள் செல்லச் செல்ல நட்பு அதிகமாயிற்று. சற்றும் அவனை விட்டுப் பிரிய ஜானகிக்கு மனம் வருவதில்லை. அவன் முகம் அடிக்கடி ஏதோ வாட்ட முறுவதைக் குறித்து அறிய விரும்பினாள்.

*　　*　　*　　*

திடீரென்று ஒருநாள் அவளுடைய தந்தை அவள் தாங்கமாட்டாத ஒரு சமாசாரத்தைக் கூறினார். அதாவது ரகுபதி நாஸ்திகன், அதோடு குடியன் என்னும் விஷயம். "குழந்தாய்! இருந்திருந்து இத்தகைய மனிதனுக்கு உன்னை அளிக்க ஒருபோதும் விரும்பேன்" என்றார்.

கடவுளுக்கு சமானமாகத் தான் கருதிய மனிதனிடம் குடி எவ்விதம் புகுந்தது என்று ஜானகி தீராத கவலையிலாழ்ந்தாள். அவனை அதிலிருந்து விடுவிக்க அவள் மனம் ஆவல் கொண்டது.

மறுநாள் ரகுபதி வந்தபோது ஜானகி அவனை இது விஷயமாக வினவினுள். அவன் சொன்னதாவது :—"ஜானகி, என் தந்தை நாஸ்திகராயிருந்தார். ஆகையால் நானும் அந்தக் கொள்கையைப் பின்பற்றினேன். ஆனால் இப்போது நாஸ்திகத்தை விட்டொழித்து விடுகிறேன். குடிப்பது தவிர வேறு ஆனந்தம் இதுவரையில் எனக்கிருந்ததில்லை. ஆனால் உன்னுடைய உதவியினால் நான் அதையும் வெல்ல முடியும். உனக்காக அதையும் தவிர்த்து விடுவேன். அந்த ஒரு காரணத்தை முன்னிட்டு நீ என்னை மறுதளிப்பது நியாயமா?" என்றான்.

ரகுபதி தான் குடிப்பதை மறுத்துக் கூறிவிடுவான் என்றிருந்த ஜானகிக்கு அவனுடைய உண்மை மொழிகளைக் கேட்டு அவன்மீது பின்னும் அன்புண்டாயிற்று.

ஜானகியின் மனம் ரகுபதியிடமே பதிந்திருப்பதையும், ரகுபதியும் அன்று முதல் முற்றும் குடியைத் தவிர்த்துவிட்டு மதுவிலக்கு இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதையும் உமாபதி கண்டு ஒருவாறு அவர்களுடைய விவாகத்திற்கு இணங்கினார். குடியன் குடியை விட்டு விட்டான் என்பது எளிதில் நம்பத் தகாத சமாசாரமான போதிலும் திடமான மனதையுடைய ரகுபதி உண்மையாகவே அன்று தொட்டு மனதினாலும் கள்ளை நினைத்தவனல்லன். அவனது மனம் ஜானகியின் சந்தோஷத்தையே நாடியிருந்தது.

ஆனால் திருநெல்வேலியில் பலர் பலவிதம் பேசிக் கொண்டனர். 'ரகுபதியாவது, குடிக்காமலிருக்கவாவது!' என்றனர். 'எல்லாம் விவாகமாகும் வரையில் தான்' என்றனர். ஆனால் ரகுபதியின் ஆப்த நண்பர்கள் ஆனமட்டும் பிரயாசைப்பட்டும் ரகுபதி மதுபானத்தை விரும்பாது நல் வழியைக் கைப்பற்றி வந்தான்.

மறுதினம் விவாகம் என்றிருக்க, அக்காதலர்களின் ஆனந்தம் கொஞ்சமல்ல.

"ஜானகி, இத்தகைய ஆனந்தமும் எனக்குக் கிடைக்குமா என்று தோன்றுகிறது. நீ என்னைப் பற்றி நல்ல சமாசாரங்களை விடக் கெட்ட சமாசாரங்களைத் தான் அதிகமாகக் கேள்விப்பட்டிருப்பாய். எந்தக் காரணத்தாலாவது நமது விவாகம் திடீரென்று நின்று போய்விட்டால் நீ என்மேல் வைத்திருக்கும் அன்பிற்காக வேறு யாரையும் மணம் புரியாமலே யிருப்பாயா?" என்றான் ரகுபதி.

ஜானகி மிகவும் கிலேச மடைந்தாள். ஒரு வினாடி ரகுபதியை அவள் சிறிது சந்தேகித்தாள் என்றே கூறவேண்டும். ஆனால் மறுவினாடி அவர்களுக்குள் ளிருந்த பாசமானது அதைப் போக்கிவிட்டது.

"அன்பரே, இத்தகைய ஆநந்தமான சமயத்தில் நீங்கள் கிலேசப் படுவதும் விவாகம் நடைபெறுமலிருக்கவும் கூடும் என்பதும் ஏன்? என்ன காரணத்தினுல் உங்களுக்கு இப்படித் தோன்றுகிறது?" என்று வினவினுள் ஜானகி.

"ஒன்றுமில்லை ஜானகி. எதிர்பாராத ஆனந்தம் என்னை அடைய வருவதனுலுண்டாகும் அதிர்ச்சியினுல் எனக்கு அவ்விதம் தோன்று கிறதே தவிர வேறில்லை. எதற்கும் எனக்கு நீ ஆறுதல் அளி. நான் கேட்ட உறுதிமொழி கொடு" என்ருன். ஜானகியும் கபடற்று உறுதி மொழி கொடுக்க இருவரும் பிரியாவிடை பெற்றுப் பிரிந்தனர்.

இரவு வெகு நேர மாகிவிட்டபடியால் ஜானகி சோர்ந்து நித் திரை செய்யப் போனுள். ஆனுல் அதற்குத் தடையாக அவளது பெயருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. "இந்நேரத்தில் யார் கடிதம் அனுப்பியிருக்கக் கூடும்? ரகுபதிகூட இப்பொழுது தானே போனுர்" என்றெண்ணியவளாய்க் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க அந்தக் கடிதம் அவளைப் பெருந் துயரத்தி லாழ்த்தியது. ஜானகி அலறுவதைக் கேட்டு அவளது தந்தை ஓடிவந்து மகளைக் கட்டியணைத்து விசாரிக்கலானுர்.



மறுநாள் மிகவும் களிப்போடு ஜானகியின் வீடுநோக்கி வந்த ரகுபதி அங்கு விவாகத்திற்கு வேண்டிய அறிகுறி சிறிதும் இல்லாதது கண்டு திகைப்படைந்தான். மிக்க ஆச்சரியத்தோடு அவன் உள்ளே ஜானகி யைத் தேடிச்செல்ல உமாபதி சிவந்த முகத்துடன் எதிர்ப்பட்டார். "இனிமேல் நீர் இவ்விடத்திற்கு வரப்போக எவ்விதக் காரணமுமில்லை

சகல சமாசாரங்களுக்கும் உமது விலாசத்துக்குக் கடிதம் சென்றிருக்கிறது” என்றார். ரகுபதி ஸ்தம்பித்து நின்றான். அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பாதத்தின் கீழுள்ள தரை பெயர்ந்து விழுவது போல அவனுக்குத் தோன்றியது. அதற்குள் அங்கு ஜானகி தோன்றி மிகவும் கோபமான குரலில் சொல்லியதாவது—“ உம்மை நேருக்கு நேராக ஒரு கேள்வி கேட்கிறேன். ஒருபோதும் பொய் பேசி யறியாதவரான நீர் அதை மறுத்தால் உமது மொழியை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். என்னை நீர் சந்திப்பதற்கு முன்னால் கொழும்பில் ஒரு சமயம் நீர் பூரணமாகக் குடித்து மதிமயங்கி யிருந்தபோது ‘ஸ்திரீகளில் சிறந்தவர்கள் இல்லை. என் பணத்திற்காகக் குடியனும் நாஸ்திகனுமாகிய என்னை, நான் வேண்டினால், எந்த ஸ்திரீயும் மணம் புரியாமல் போகாள்’ என்று சொன்னதும், சிலர் என் பெயரைக் கூறியதும், நீர் என்னை வெல்வதாகப் பந்தயமிட்டதும், அதற்காகவே நீர் என்னை வஞ்சிக்க நினைத்ததும்,—இவையெல்லாம் பொய்யா, உண்மையா ?” என்றாள்.

ரகுபதி என்ன பதில் கூறுவான் ? எப்படி அதை மறுப்பான் ? குடித்து மதிமயங்கியிருந்த சமயம் அவன் அவ்விதம் பந்தயமிட்டதுண்மையே. ஆனால் அவன் ஜானகியைப் பார்த்ததுமுதல் முற்றும் வேறு மனிதனானான். அவளை மனதார நேசித்து உண்மையாகவே அவளை மனைவியாக அடைய விரும்பியதும் உண்மையே. அதை இப்பொழுது கூறினால் ஜானகி எங்ஙனம் ஏற்றுக் கொள்ளுவாள் ? மற்ற சகல சங்கதிகளையுங் கூறியிருந்தும் பந்தய விஷயத்தை இதுவரை தன்னிடம் கூறாத காரணம் யாதென்று அவள் கேட்கக் கூடுமல்லவா ? அந்த ஒரு காரணமே தன்னை நிராகரித்துவிடப் போதியதாகாதா ? ஆகவே ரகுபதி வாய் பேசாது நின்றான்.

கேள்விக்கு பதில் சொல்லாமல் நிற்பதைக் கண்டு உமாபதியும் ஜானகியும் அவனைக் குடியன், சூதாடி யென்றே நம்பி வெறுத்தனர். உமாபதி அவனை வெளியே போகும்படி உத்திரவிட்டார்.

ரகுபதிக்கு உலகம் ஓர் கொடிய காடெனத் தோன்றியது. தீராத துன்பம் தனக்கு நேர்ந்து விட்டதை உணர்ந்தான். தன் இருப்பிட மடைந்ததும் வெகுநாளாக உடைக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்த வுஸ்கிபுட்டியை யெடுத்து மூடியைத் திறந்து மேஜைமீது வைத்துச்சிறிது சிந்தித்தான். தான் குடிப்பது ஜானகிக்குத் துன்பத்தை யுண்டாக்கும் என்றெண்ணினான். அதற்காகவே குடிக்கத் தீர்மானித்தான்.

ஸ்திரீகளை முன்னிலும் பகைத்துத் திட்டினான். "என் ஆனந்த தேவதையே! உன்னை விட்டதனாலல்லவா எனக்கு இவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தன? கொஞ்சம் காசு கையிலிருக்கும் வரை நீ என்னைக் கைவிடுவாயா? நீயே என் அன்பான மனைவி" என்று கூறி நாள்முழுதும் குடித்தான். அவனுக்குத் துக்கத்தாலும் குடியாலும் பசிதாகம் தெரியாமலிருந்தது. மேலும் மேலும் குடித்தபடியே மாலைவரை பொழுது போக்கினான்.

அன்று ஒரு கூட்டத்தில் 'குடி கூடாது' என்பதைப் பற்றிப் பிரசங்கம் செய்ய ஒத்துக்கொண் டிருந்தது திடீரென்று ஞாபகம் வந்தது. தானிருக்கும் நிலைமை தெரியாது எழுந்து சபைக்குச் சென்றான்.

விவாகம் என்ன காரணத்தாலோ தடைப்பட்டு விட்டதின் நிமித்தம் அவன் அவ்வாறு மாறி யிருப்பதாய் அனைவரும் நினைத்தார்கள். ரகுபதி பேச எழுந்து நின்றதும் தன் தேகம் தண்ணீரில் மிதப்பது போல அவனுக்குத் தோன்றியது. உடம்பு ஆடியது. நாக்குழறியது. "என் உடம்பு-உடம்பு-போய்-மிதக்கிறது" என்று உளறத் தொடங்கினான். சபையில் 'கொல்'லென்ற சிரிப்புண்டாயிற்று. கண்ணியமான மனிதனுக்கு இதைவிட அவமானம் வேறென்ன உண்டு? ரகுபதி நிலைமையைச் சிறிது உணர்ந்தான். அவமானம் ஒரு புறம், குடிமயக்கம் ஒருபுறம். தொப்பென்று கீழே வீழ்ந்து மூர்ச்சையானான்.

ரகுபதிக்கு நினைவு வந்தபோது தன் வீட்டிலிருக்கக் கண்டான். நடந்ததெல்லாம் ஞாபகம் வந்தது. தெருவில் சென்று பார்த்தான். எங்கும் விளம்பரங்கள் ஒட்டப்பட்டு அவனுடைய இழிவான நடவடிக்கைகள் எடுத்துக் கூறப்பட்டிருந்தன. மறுபடியும் வீட்டுக்குள் வந்தான்.

ரகுபதி மரணமடைந்த சங்கதி மெதுவாக ஊரெங்கும் பரவத் தொடங்கியது. பிறகு அவனுடைய உண்மை வரலாறும் தெரியலாயிற்று. ஜானகி பெருந் துயரத்தி லாழ்ந்தாள். குடித்து மயங்கியிருக்கும் சமயத்தில் தகாத விஷயத்திற்குப் பந்தயமிட்டு, அதனால் பிற்பாடு துக்கப்பட்டு, துக்கந் தாங்காமல் மறுபடி குடித்து, அதனால் அவமானப்பட்டு, அவமானந் தாங்காமல் இறந்த ரகுபதியை சதா எண்ணி எண்ணி அவள் உருகினாள். அவனிடம் கூறியபடியே தன் வாழ்நாளை மணமின்றியே கழித்தாள்.

மதுவிலக்கு விஞவிடை

9

வினு :—மதுபானம் சம்பந்தமாக சர்க்கார் கொள்கை என்ன ?

விடை :—“குடி குறையவேண்டும் ; ஆனல் வருமானம் குறையக் கூடாது” என்பதுதான் இதுவரையில் இந்திய சர்க்கார் தாங்கள் அனுஷ்டித்து வருவதாகச் சொல்லும் கொள்கை.

வினு :—இது எப்படி சாத்தியம் ?

விடை :—கள்ளு சாராயத்தின் விலையுயர்ந்தால் ஏழைகள் கொஞ்சமாய்க் குடிப்பார்களென்பது கருத்து. இந்தப் பொருளாதார தத்துவம் மற்ற சாதாரண பொருள்களின் விஷயத்தில் உண்மையா யிருக்கலாம். ஆனல் குடிக்குப் பொருந்தாது. இரண்டணு விற்ற புட்டி மூன்றணு விற்ருலும் குடிகாரன் குடியை விடப் போவதில்லை. மனைவி மக்களைப் பட்டினி போட்டாவது குடித்தே தீருவான்.

வினு :—இந்த முறை அநுபவத்தில் எப்படி நடந்திருக்கிறது ?

விடை :—வருமானம் மேலும் மேலும் அதிகமாகி வந்திருக்கிறது ; ஆனல் குடிமட்டும் குறையவில்லை.

வினு :—அப்படியானல் தீமை முன்னைவிட அதிகமாயிற்றென்று ஏற்படுகிறதே ?

விடை :—ஆமாம் ; ஏழைகள் வருஷந்தோறும் அதிக பணம் தொலைத்துக் கொடிய வறுமையில் மூழ்கி வருகிருர்கள்.

வினு :—புள்ளி விவரங்கள் சொல்ல முடியுமா ?

விடை :—நமது இந்தியா தேசம் முழுவதிலும் 1860-ம் வருஷத்தில் சர்க்கார் அடைந்த கலால் வருமானம் ஒரு கோடி ரூபாய்தான். நாளடைவில் அது எப்படிப் பெருகி விட்டதென்று பாருங்கள்:—

வருஷம்	ரூபாய்
1885	4 கோடி
1890	5 ,,
1900	6 ,,
1905	$8\frac{1}{2}$,,
1910	$10\frac{1}{2}$,,
1915	13 ,,
1920	20 ,,
1928	24 ,,

சர்க்கார் வருமானம் அதிகமானதைப் போல் ஜனங்கள் மொத்தத்தில் குடிக்காகத் தொலைத்த தொகையும் பெருகியே வந்திருக்க வேண்டுமல்லவா ?

வினு :—இந்தக் காலத்தில் கள்ளு சாராயக் கடைகள் குறையவில்லையா ?

விடை :—கடைகள் குறைந்திருக்கின்றன. 1904-ம் வருஷத்தில் 90,000 கடைகள் இருந்தன. வரவரக் கடைகளைக் குறைத்து இப்போது 45,000 கடைகளுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இதனால் குடிக்கு எவ்விதக் குறைவும் ஏற்படவில்லை. ஏற்கனவே உள்ளூரில் குடித்தவர்கள் இப்போது அயலூர் சென்று குடிக்கிறார்கள். அவ்வளவுதான்.

வினு :—கள்ளுக் கடைகள் குறைந்து வருமானம் அதிகமானதற்கேற்பக் குடியின் அளவு குறையவில்லையா ?

விடை :—குறையாதது மட்டுமன்று ; வருமானத்தைப்போல் குடியும் அதிகமாகி வந்திருக்கிறது.

வினு :—இதற்கு ஆதாரமான புள்ளி விவரங்கள் உண்டா ?

விடை :—சிலவகை மதுபானங்களுக்குப் புள்ளி விவரங்கள் கொடுக்கலாம். சீமைச்சரக்கு இறக்குமதியை எடுத்துக் கொள்வோம் :—

வருஷம்	இறக்குமதி (காலன்)
1876	7,01,177
1905	12,97,611
1928	62,07,343

சீமைக் குடி ஒன்றுக்கு ஒன்பது மடங்காகப் பெருகி யிருக்கிறது.

வினு :—நாட்டுக் குடிவகைகளாவது குறைந்திருக்கின்றனவா ?

விடை :—கிடையாது. சென்னை மாகாணத்தில் நாட்டுச் சாராயம் செலவான கணக்கைப் பாருங்கள் :—

வருஷம்	காலன்
1902	8,75,755
1927	14,47,670
1929	15,96,998

கள்ளுக்கு சர்க்கார் அறிக்கைகளில் அளவுக் கணக்கு தொடுப்பதில்லை. ஆனால் கட்குடியும் அதிகமாகியே இருக்கிறது என்பது அனுபவம்.

* * * *

10

வினு :—அரைகுறையான முயற்சிகளால் பயனில்லை யென்றும், குடியை அடியோடு தொலைத்து விடுவதுதான் சரி என்றும் தெரிந்து

காணடேன். சர்க்கார் கடைகளை யெல்லாம் மூடிவிட்டால் தனிப்பட்டவர்கள் கள்ளு சாராயக் கடைகளை வைத்து நடத்தமாட்டார்களா?

விடை :—இதற்குத் தான் சட்டம் செய்ய வேண்டுமென்பது.

வினு :—என்ன சட்டம்?

விடை :—நாட்டில் யாரும் கள்ளு, சாராயம், அபினி முதலிய லாகிரிப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடாது; அவைகளை விற்கவும் வாங்கவும் கூடாது; அவைகளை உபயோகிக்கவும் கூடாது என்று திட்டம் செய்யவேண்டும். அதற்குத்தான் மதுவிலக்குச் சட்டம் என்று பெயர்.

வினு :—இதென்ன பேச்சு? ஜனங்கள் உண்ணும் விஷயத்திலும், குடிக்கும் விஷயத்திலும் சட்டம் செய்து கட்டுப்படுத்த முடியுமா?

விடை :—ஏன் முடியாது? விஷ விற்பனையைச் சட்டமூலம் தடுக்கவில்லையா? மது சாதாரண உணவுப் பண்டமல்ல; அது ஒருவகை விஷந்தான். சாதாரண விஷத்தைவிட அது அபாயகரமானது. ஏனென்றால் சாதாரண விஷத்தைக் கண்டு மக்கள் அஞ்சுவார்கள். மதுவோ மனிதர்களை ஏமாற்றி இழுத்துத் தன் வலையில் சிக்கவைக்கும். ஆகையால் அதன் உற்பத்தி, விற்பனை, உபயோகம் இவைகளைத் தடுக்க அவசியம் சட்டம் செய்யவேண்டும்.

வினு :—இது மனிதர்களின் சுதந்திரத்தில் தலையிடுவ தாகாதா?

விடை :—ஒருநாளும் ஆகாது. ஒருவன் தற்கொலை செய்து கொள்ள விரும்பினால் அதை சமூகம் பார்த்துக் கொண்டிருக்கலாமா? சுதந்திரத்தின் உண்மைத் தத்துவம் இதுவன்று. ஆகையால்தான் தற்கொலை செய்துகொள்ள முயலுதல் எந்த தேசத்திலும் குற்றமாகக் கருதப்படுகிறது.

வினு :—மதுபானம் செய்தல் தற்கொலை செய்து கொள்வதைப் போன்றதா?

விடை :—அதைவிடக் கொடியது. தற்கொலை செய்துகொள்பவன் தன்னைமட்டும் உடனே அழித்துக் கொள்கிறான். மதுபானம் செய்பவன் தன்னையும் அழித்துக்கொண்டு சமூகத்துக்கு தினமும் தீங்கு விளைக்கிறான்.

வினு :—சுதந்திரத்தின் உண்மைத் தத்துவம் என்ன?

விடை :—சமூகத்திலுள்ள மற்றவர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் தான் முன்னேற்ற மடைவதற்குப் பூரண உரிமை பெறுவது தான் உண்மையான சுதந்திரம்.

வினு :—மதுபானம் செய்யும் உரிமை இத்தகைய தல்லவா?

விடை :—மதுபானம் மனிதனுடைய சொந்த முன்னேற்றத்துக் தடையாவதோடு சமூகத்தில் மற்றவர்களுக்கும் பாதகம் விளைக்கிறது. ஆகையால் குடிக்கும் சுதந்திரம் உண்மையில் சுதந்திரமே யன்று. மேலும் இப்போதுள்ள கலால் சட்டத்துக்குங்கூட இதே ஆட்சேபம் சொல்லலா மல்லவா? சர்க்கார் லைசென்ஸு பெற்ற கடைகளில் தான் குடிக்க வேண்டுமென்பது மனிதர்களின் சுதந்திரத்தில் தலையிடுவ தாகாதா?

* * * *

11

வினு :—சட்டம் செய்தவுடன் குடிநின்று போய்விடுமா? இரகசிய மாய்க் குடிக்கமாட்டார்களா?

விடை :—முதலில் கொஞ்சகாலம் இது நடக்கலாம். ஆனல் மொத்தத்தில் குடி 100-க்கு 90 பங்கு உடனே குறைந்துவிடும்.

வினு :—அது எப்படி?

விடை :—பகிரங்கமாய் எவ்விதத் தடையுமின்றி நினைத்தபோது குடித்தலுக்கும், இரகசியமாய்ப் பயந்து ஒளிந்து குடிப்பதற்கும் எவ்வளவோ வித்தியாஸம் உண்டு. தண்டனைக்குத் துணிந்து குடிப்பவர்கள் வெகு சிலரே இருப்பார்கள். மேலும் குடிகாரர்களுக்கே குடியின் தீமை நன்ருய்த்தெரியும். கள்ளுக்கடை பக்கத்திலிருப்பதால் தான் அவர்களில் பலர் குடிவெறியை அடக்கிக்கொள்ள முடியாமல்போய்க் குடிக்கிருர்கள். கடையில்லா விட்டால் 100க்கு 90 பேர் குடிக்க மாட்டார்கள். அடியோடு கள்ளுக்கு அடிமையாய்ப் போன சிலரும், பணக்கொழுப்புள்ள சிலருமே திருட்டுக் கள்ளில் கவனம் செலுத்துவார்கள்.

வினு :—திருட்டுக் கள்ளுக் குடிப்பவர்களை சுலபமாய்க் கண்டுபிடிக்க முடியுமா?

விடை :—வேறெந்தக் குற்றம் செய்தவர்களையும் விட இவர்களை எளிதில் கண்டுபிடிக்கலாம். பார்த்தவுடன் போதை மயக்கம் தெரியும். புத்தியிழந்தவன் எப்படி மறைத்துக்கொள்ள முடியும்?

வினு :—உண்மைதான். ஆனல் இதுவும் கொஞ்ச காலந்தான் நடக்கும் என்று சொன்னீர்களே, அது என்?

விடை :—ஆமாம். பழைய குடிகாரர் சிலர் கெட்டுப் போனலும், புதிய குடியர்கள் உண்டாக மாட்டார்கள். இளைஞர்கள் அனைவரும் அதாவது அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்க ளெல்லாம் தப்பிப்பிழைப் பார்கள். ஆகையால் கொஞ்ச காலத்தில் குடியென்பது அடியோடு மறைந்துவிடும்.

வினு :—என்ன இருந்தாலும் கொஞ்சகாலம் வரை திருட்டுக் கள்ளுக் குற்றங்கள் நடந்தே தீருமல்லவா? மீறி நடப்பார்களென்று தெரிந்து ஒரு சட்டம் செய்யலாமா?

விடை :—என் செய்யக்கூடாது? திருட்டு, கொலை முதலிய எல்லாக் குற்றங்களும் இப்படித் தான். ஒரு சிலர் சட்டத்தைமீறி இத்தகைய குற்றங்களைச் செய்துதான் வருகிறார்கள். அதற்காகத் திருட்டு, கொலைகளைத் தடுக்கும் சட்டம் கூடாதென்று யாரும் சொல்வதில்லை.

வினு :—மதுபானம் கொலை, களவுகளைப் போன்ற அவ்வளவு பெரிய தீமையா?

விடை :—அவைகளை விடப் பெரிய தீமை. அது கொலை, களவு முதலியவைகளைத் தூண்டும்.

வினு :—இப்போது கூட ஆப்காரி சட்டத்துக்கு விரோதமான குற்றங்கள் நடந்து வருகின்றனவே? குடிப்பதற்கு ஏராளமான வசதியுள்ள இப்போதே குற்றங்கள் நடக்கின்றனவென்றால், மதுவிலக்குச் சட்டம் செய்தால் இன்னும் குற்றங்கள் அதிகமாகு மல்லவா?

விடை :—மதுவிலக்குச் சட்டம் செய்தால் இப்போதைவிடத் திருட்டுக் கள் குற்றங்கள் குறையும். இப்போது ஆங்காங்கே கள்ளு சாராயக் கடைகள் இருப்பதால் குற்றங்கள் நடப்பது சாத்தியமாகின்றது. கண்டு பிடிப்பதும் கஷ்டம். கள்ளை அடியோடு தொலைத்து விட்டால் குற்றங்களை வெகு சுலபத்தில் கண்டு பிடிக்கலாம். அவை அசாத்தியமாகி விடுமென்றே சொல்லலாம்.

வினு :—மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்றிவைக்கப் பணச் செலவு அதிகம் ஆகுமல்லவா? திருட்டுக் குடியைத் தடுப்பதற்கு ஏராளமான சிப்பந்திகள் வைத்துக் காவல் காக்க வேண்டுமே?

விடை :—நமது தேசத்தில் இது தேவையேயில்லை. சாதாரண போலீஸே இதற்குப் போதும். நமது ஜனங்களில் 100-க்கு 90 பேர் குடிக்காதவர்களாதலாலும், மது ஒழிய வேண்டுமென்று கவலையுள்ளவர்களாதலாலும், ஸ்திரீகள் புருஷர்கள் குழந்தைகள் முதல் எல்லாரும் முன் வந்து திருட்டுக் கள் குற்றம் நடவாமல் பார்த்துக்கொள்ள உதவி செய்வார்கள். அப்படித் தவறி ஒரு சில நடந்தாலும் அவற்றை எளிதில் கண்டுபிடித்து விடலாம்.

வினு :—புட்டிச் சரக்குக் குடித்துப் பழக்கம் பெற்ற பெரிய பணக்காரர்கள் ஏராளமான பணங் கொடுத்தாவது குடிக்க விரும்புவார்களல்லவா? இவர்களுக்கு மது விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் ஆசையுடன் துஷ்டர்கள் புறப்பட மாட்டார்களா?

விடை :—இப்படிப்பட்டவர்கள் ஏற்பட்டால் இவர்களுக்கு எ[illegible]மான அபராதம் போட்டுப் பணம் வசூலிக்கலாம். இந்தப் பணத்தைக் கொண்டு மது விலக்கு இலாகா சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்து நடத்தலாம். எப்படிப் பார்த்தாலும் அரசாங்கத்துக்கு அதிக பணச் செலவு ஏற்பட முகாந்திரமில்லை. ஆனால் அப்படியே பணச் செலவு அதிகம் நேரிட்டால் கூட, இத்தனை நாள் இந்தக் கொடிய வியாபாரம் நடத்திப் பணம் சேர்த்ததற்குத் தண்டனை யென்று நினைத்துக்கொண்டு செலவு செய்ய வேண்டியதுதான்.



இந்த பயங்கரமான வேங்கைப் புலி மொத்தம் 20 மனிதர்களைக் கொன்றது. இதற்கு சர்க்கார் லைஸென்ஸு கொடுத்து மனிதர்களைக் கொல்லும்படி விட்டிருந்தார்களா? கிடையாது. இதைக் கொன்று கொண்டு வருபவர்களுக்கு ரூ. 500 பரிசளிப்பதாக அறிவித்தார்கள். கல்விக்குப் பணம் வேண்டும், சுகாதாரத்துக்குப் பணம் வேண்டும் என்று சாக்குப்போக்கு சொல்லவில்லை.

புலி இருபது பேரைத்தான் கொன்றது. ஆனால் கள்ளு சாராயக் கடைகளினால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இறந்து வருகிறார்கள். அத்துடன் எவ்வளவோ வறுமைக்கும், துன்மார்க்கத்துக்கும், நோய் நொக்காடுகளுக்கும் அவை காரணமாயிருக்கின்றன. அக்கடைகளை மட்டும் லைஸென்ஸு கொடுத்து ஏன் விட்டிருக்க வேண்டும்? சர்க்கார் வருமானம் போய் விடுமென்று காரணங்காட்டுவது சரியா?

ஒரு கலால் உத்தியோகஸ்தர்

சமீபத்தில் கோயமுத்தூர் ஜில்லா பவானியில் கலால் இலாகா உத்தியோகஸ்தர்களின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மகா நாட்டுக்கு உபசரணை சபைத்தலைவராயிருந்த சத்தியமங்கலம் கலால் ஸப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் இரத்தினசபாபதிப்பிள்ளை, அவர்களின் வரவேற்புப் பிரசங்கம் நமது பார்வைக்கு வந்தது.

ஆரம்பத்தில் ஸ்ரீமான் பிள்ளை பவானி க்ஷேத்திரத்தின் மகிமையை எடுத்துச் சொல்கிறார். அது ஜீவநதிகளாகும் காவேரியும், பவானியும் சங்கமமாகும் புண்ணிய தீர்த்தம் என்பதை எடுத்துக் காட்டிவிட்டு, உடனே சர்க்காரின் கள்ளு வியாபாரத்தையும், கலால் இலாகாவையும் தாங்கிப்பேசத் தொடங்குகிறார்.

"நாமெல்லாரும் கலால் இலாகாவைச் சேர்ந்தவர்களா யிருப்பது பற்றி ஒரு வகையில் பெருமை கொண்டிருக்கிறோம். இந்த இலாகா அரசாங்க இயந்திரத்தின் மிக முக்கியமான ஒரு பாகம். எந்தக் காலத்திலும், எந்த தேசத்திலும், வருமானமில்லாமல் அரசாங்கம் நடைபெற முடியாது. அரசாங்க வருமானத்தில் ஒரு பெரும் பகுதி கிடைப்பதற்கு நாம் காரணர்களா யிருக்கின்றோம்."

என்று சொல்கிறார். அரசாங்கம் நடப்பதற்கு வருமானம் தேவையென்பது உண்மையே. ஆனால் அது நல்ல வழியில் வரவேண்டாமா? ஜனங்களின் செல்வத்தைப் பெருக்கி அதில் ஒரு பகுதி சர்க்கார் எடுத்துக் கொள்ளுவதுதான் சரியான முறை. ஜனங்கள் குடியில் அழிக்கும் பணத்தில் சர்க்கார் பங்கு பெறுவது பெருமை கொள்ளத்தக்க விஷயமா?

"ஜனங்களுக்குத் திருட்டுக்கள்ளும், திருட்டுச் சாராயமும் கிடைக்காமல் செய்து நல்ல ஆரோக்கியமான மதுவகைகளையும், லாகிரிப் பொருள்களையும் அவர்களுக்குக் கொடுக்கும் பொறுப்பு நமக்களிக்கப் படுகிறது. 'குடி குறையவேண்டும், வருமானம் அதிகமாக வேண்டும்' என்னும் முறையைப் பற்றி வேலைசெய்யும்படி நமக்குச் சொல்லி யிருக்கிறார்கள். எவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் நாம் இந்த முறையை அமுல் நடத்திவருகிறோமென்பதும், இதற்குப் பதில் நம்மை ஜனங்கள் பாராட்டுவதற்கு மாறாக எப்படி வெறுக்கிறார்கள் என்பதும் நீங்கள் அறிந்தவையே. இந்த நாட்டில் படித்த வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்கள் அனைவரும்

> நம்மைக் கொள்ளை நோய்போல் கருதி வெறுக்கிறார்கள். கஷ்டமே அறியாதவர்க ளென்றும் சுகபோகத்தில் கிடந்து பு... கிறோ மென்றும் நினைக்கிறார்கள்."

என்று ஸ்ரீமான் பிள்ளை பரிதாபமாகச் சொல்கிறார். ஸ்ரீமான் பிள்ளைக்கும், அவருடைய சகோதர உத்தியோகஸ்தர்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் அவர்கள் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களாயின், ஜனங்கள் உண்மையில் அவர்களை வெறுக்கவில்லை யென்றும், அவர்கள் நடத்திவைக்கும் கெட்ட வியாபாரத்தையே வெறுக்கிறார்க ளென்றும் தெரியவரும். மதுபானத்தில் ஆரோக்கியமானது அனாரோக்கியமானது என்கிற வித்தியாசம் கிடையாது. திருட்டுக் கள்ளினால் வரும் தீமையும், சர்க்கார் கடையில் விற்கும் கள்ளினால் வரும் தீமையும் ஒன்றுதான். போதைகொண்டு சாக்கடையில் விழுந்துகிடக்கும் புதல்வனைப் பெற்ற தாயார், அவன் சர்க்கார் லைசென்ஸ் பெற்ற கடையில் சட்டப்படி தானே குடித்தான் என்றெண்ணிச் சந்தோஷ மடைவாளா?

'குடி குறையவேண்டும், வருமானம் அதிகமாக வேண்டும்' என்னும் முறையை நடத்துவதிலுள்ள கஷ்டங்களைப் பற்றிச் சொல்கிறார். பொது ஜனங்கள் அவற்றை உணரவில்லை யென்று குறை கூறுகிறார். உண்மையில் அக்கஷ்டங்களை நாம் நன்குணர்ந்திருக்கிறோம். கஷ்டம் மட்டுமல்ல. மேற்சொன்ன முறையை நடத்திவைக்கவே முடியாதென்றும் அறிந்திருக்கிறோம். இத்தனை வருஷகாலமாய் இம்முறையை நடத்திவந் திருப்பதின் பயன் என்ன? வருமானம் அளவின்றிப் பெருகிவிட்டது. ஆனால் குடிமட்டும் குறையவில்லை. அதற்குமாறாகக் குடியும் அதிகமாகியே வந்திருக்கிறது.

> "இப்போது தேசமெங்கும் மதுவிலக்குச் கூச்சல் போடுவது சாதாரணமாய்விட்டது. சட்ட சபைகளிலுள்ள ஜனப் பிரதிநிதிகள், —கல்வியும் நாகரிகப் பயிற்சியும் உள்ளவர்கள், விசால திருஷ்டி படைத்தவர்கள்—இவர்கள்கூட இந்த விஷயத்தில் இரண்டு பட்சங்களையும் பொறுமையாகக் கேட்டு முடிவுசெய்யப் பயப்படுகிறார்கள். நமது இலாகா முழுகிப்போக வேண்டியதென்றே அவர்கள் கருதிவிட்டார்கள். எதிர் தரப்பு வாதங்களைக் கேட்டபோதிலும் மனச்சாட்சிக்கு விரோதமின்றி உண்மையான முடிவுசொல்ல அவர்களுக்குத் தைரியமில்லை."

என்று வருந்துகிறார். சட்டசபை அங்கத்தினர் முதலிய படித்த வகுப்பார்மீது ஸ்ரீமான் பிள்ளை குறை கூறுகிறார். உண்மையில் இதற்கு நேர் விரோதமான புகார் நாம் சொல்லி வருகிறோம். ஏழைகளின் துய்

...றிந்தவர்களா யிருந்தால், மனச்சாட்சிக்குச் சம்மதமாய் நடப் ...ா யிருந்தால், அவர்கள் சிறிதும் தயக்கமின்றிக் கள்ளு சாராயக் ...டகளை உடனே ஒழிக்க இப்போதைக் காட்டிலும் தீவிரமாய் வேலை செய்திருப்பார்கள்.

கலால் இலாகாவே போய்விடுமோ வென்று அந்த இலாகா உத்தியோகஸ்தர்களின் மனதில் இப்போது கவலை எற்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. பூரண மதுவிலக்கு எற்பட்டால் கலால் இலாகா மதுவிலக்கு இலாகாவாக மாறும். ஸ்ரீமான்பிள்ளை சொல்வதுபோல், இப்பொழுது, பொது ஜனங்களால் வெறுக்கப்பட்டு வேலை செய்வதற்குப் பதிலாக, அப்பொழுது பொது ஜனங்களின் பூரண ஆதரவுடனும் அபிமானத்துடனும் வேலை செய்யலாம்.

> "இங்கு நமது இலாகாவின் தற்போதைய நிலைமையைப் பற்றிய ஒரு முக்கியமான சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஜில்லா மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியின் தலைவர் ஒருவர் கலால் இலாகா உத்தியோகஸ்தர்கள்மீது எழுதிய புகாரையும், அதன்மேல் கலால் இலாகா கமிஷனர் எழுதிய யாதாஸ்தையும் குறிப்பிடுகிறேன். தற்போது வருமானத்தைப் பற்றி அரசாங்கத்துக்கு அவ்வளவு கவலை.யில்லையென்றும், கடைகள் திறக்கவேண்டிய நேரம் முதலியவை சம்பந்தமான கலால் இலாகா விதிகளைக் கண்டிப்பாய் நடத்த வேண்டுமென்றும் அதில் உத்திரவிட்டிருக்கிறார். விதிகளை சரியாய் நடத்திவைக்க வேண்டியது நமது கடமை யென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதுவிஷயமாக எனக்குள்ள பயத்தை நான் பகிரங்கமாகச் சொல்லவேண்டியவனா யிருக்கிறேன். மேற்படி ஜில்லா மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டித் தலைவரின் கடிதத்தில் நமது இலாகாவுக்கே பெரிய அபாயம் மறைந்து நிற்கிறது."

கலால் இலாகா நிர்வாகத்தின் நிலைமை யறிந்தவர்களுக்கு ஸ்ரீமான் பிள்ளையின் பயம் இன்னதென்று விளங்கும். கலால் இலாகா விதிகளையெல்லாம் கண்டிப்பாய் நடத்தி வைப்பதாயிருந்தால் சர்க்கார் வருமானம் பாதி குறைந்து போய்விடும். எலத்தில் யாரும் இப்போதுபோல் தாராளமாய்க் கோரமாட்டார்கள். விதிகள் புத்தகத்தில் தான் இருந்து வருகின்றன. வருமானத்தைத்தான் முக்கியமாய்க் கருதிவந்தார்கள். இத்தனை காலம் இவ்வா றிருந்துவிட்டு இப்போது திடீரென்று விதிகளைக் கண்டிப்பாய் நடத்துவ தென்றால் எவ்வாறு சாத்தியம்? இதற்கு உத்தியோகஸ்தர்களின் மனப்பான்மை அடியோடு மாறியாகவேண்டும். நமது மார்கழி இதழில் வெளியான "புது இன்ஸ்பெக்டர்" என்னும் கதையில் இதைக் குறித்து விவரமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. எனவே, கலால் விதிகளை அமுல் நடத்தாததற்காகக் கலால் உத்தியோகஸ்தர்

களைத் தண்டிப்பதென்றால் கொஞ்ச நாளில் கலால் இலாகாவை விட நேரும்.

பின்னர், கோயமுத்தூர் ஜில்லாவில் கொலை, கொள்ளை முதல கொடுங் குற்றங்கள் சர்வ சாதாரணம் என்று ஸ்ரீமான் பிள்ளை குறிப்பிட்டு இத்தகைய ஜில்லாவில் திருட்டுக் கள், திருட்டு சாராயக் குற்றங்களைக் கண்டுபிடித்தல் எவ்வளவு கஷ்டமென்பதை விவரிக்கிறார். உண்மையே. ஆனால் கொலை முதலிய குற்றங்களுக்குத் தைரியம் கொடுக்கும் முக்கிய காரணமெது என்பதை ஸ்ரீமான் பிள்ளை கவனிக்கவில்லை. அது மதுபானமே யாகும்.

"திப்பு சுல்தான் தம் காலத்தில் கள்ளுக் கடைகளை யெல்லாம் ஒழித்து விடும்படியும், கள்ளு மரங்களை யெல்லாம் வெட்டி விடும்படியும் உத்திரவிட்டார். ஆனால் திப்புவைப் போன்ற சுல்தான்கள் வந்துபோயினர்; இந்த ஜில்லாவில் குடிமட்டும் எப்போதும் போல் இருந்துவருகிறது."

என்று ஸ்ரீமான் இரத்தினசபாபதி சொல்வது எதை நிரூபிக்கிறதென்று பார்க்கவேண்டும். திப்பு சுல்தான் தமது குடிகளின் நலத்தில் கவலை கொண்டிருந்தார், அவருக்குப் பின்வந்த சர்க்கார் வருமானத்திலேயே கவலை கொண்டிருந்தார்கள் என்பதைத் தான்.

நமது பத்திரிகையைப் பற்றியும் ஸ்ரீமான் இரத்தினசபாபதி குறிப்பிடுகிறார்:—

"திருச்செங்கோட்டிலிருந்து 'விமோசனம்' என்னும் மதுவிலக்கு மாதப் பத்திரிகை ஒன்று வெளியாவது உங்களுக்குத் தெரியுமா வென்று நான் அறியேன். அது அழகான, நல்ல பத்திரிகை. மிகவும் மலிவானது. தென்னாட்டுத் தலைவர் ஒருவரால் நடத்தப்படுவது. அதன் வருஷ சந்தா ஒரு ரூபாய்தான். இதே மாதிரியான வேறு பத்திரிகைகள் குறைந்தது மூன்று, நான்கு மடங்கு விலை அதிகம் இருக்கும். இவ்வாறு இப் பத்திரிகையை நான் புகழ்ந்து கூறுவதுபற்றி நீங்கள் தப்பபிப் பிராயம் கொள்ளக் கூடாது. அது உண்மையிலேயே நன்று யிருக்கிறது. நமது எதிரிகளிடம்கூட நல்ல அம்சம் இருந்தால் அதை நாம் பாராட்ட வேண்டியதே. இந்தப் பத்திரிகையில் குடிப் பழக்கத்தின் தீமைகளைக் காட்டும் ஏராளமான புள்ளி விவரங்களும் வேறு கட்டுரைகளும் வெளியாகின்றன. அமெரிக்க ஐக்ய நாட்டில் மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்ட பிறகு விளைந்த நன்மைகளையும், செல்வப் பெருக்கையும் பற்றி அப் பத்திரிகை கூறுகிறது. ஆனால் மேற்படி சட்டத்தின் பாதகமான அம்சங்களையும், இரகசியக் குடி முன்னைவிட இப்போது அந் நாட்டில் அதிகமாகியிருக்கிற தென்

ம் அப்பத்திரிகை வெளி யிடுவதில்லை. ஆகையால் இப் பத்திரிகையையும், அதுபோன்று மற்றப் பத்திரிகைகளில் வரும் விரோதமான விஷயங்களையும் படிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். சாதக, பாதகமான விஷயங்கள் எல்லாம் நாம் அறிந்திருக்க வேண்டும். மதுபானத்தை நீங்கள் ஆதரித்துப் பேசவேண்டாம். ஆனால் ஜனங்கள் பொய்வாதங்களினால் உங்களைத் தாக்கும்போது அவர்களுக்குப் பதில் சொல்லத் தயாரா யிருங்கள். ஆனால் மரியாதையாகப் பதில் சொல்லுங்கள். நாம் நியாயத்தைக் கடைப் பிடித்து நேர்வழியில் நடப்போம். பலா பலன்களை ஆண்டவனிடம் ஒப்படைத்து விடுவோம். அப்போது தான் இந்த நெருக்கடியி லிருந்து நாம் வெற்றியுடன் வெளிக் கிளம்ப முடியும்."

நம்மை எதிரியாகக் கருதும் ஒருவர் நமது பத்திரிகையைப் பாராட்டிக் கூறும் மொழிகளுக்காக நன்றி செலுத்துகிறோம். அவர் நம்மீது சொல்லும் குறையைப் பற்றி ஒரு வார்த்தை. அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டத்தை மீறிச் சிலர் இரகசியமாய் மதுவியாபாரம் செய்கிறார்களென்பதும், சிலர் இரகசியமாய்க் குடிக்கிறார்களென்பதும் உண்மையே. இதை நாம் எப்போதும் மறுக்கவில்லை. உலக மெங்குமுள்ள மதுவியாபாரிகள் இதைப்பற்றி வேண்டுமளவு மிகைப்படுத்திப் பொய் கலந்து பிரசாரம் செய்துவருகிறார்கள்.

அமெரிக்காவில் சட்டத்தைமீறி இரகசியமாய்க் குடிக்கிறார்கள் என்பதனால் ஏற்படுவதென்ன? மதுவிலக்குச் சட்டம் பிசகு என்று ஏற்பட்டுவிடுமா? எந்த நாட்டிலும் எந்தச் சட்டத்தையும் சிலர் முதன் முதலில் மீறித்தான் நடப்பார்கள். அதனால் சட்டம் தவறாகுமா? மொத்தத்தில் ஒரு சட்டத்தினால் விளைவது நன்மையா, தீமையா என்று தான் பார்க்கவேண்டும். அமெரிக்காவில் மதுவிலக்கினால் நன்மை விளைந்திருக்கிறதா? தீமை விளைந்திருக்கிறதா? இதற்கு எளிதில் பதில் சொல்லலாம். அமெரிக்கர் பூரண சுதந்திரமுள்ள நாட்டார். அங்கே ஜன நாயகம் நிலவுகிறது. மதுவிலக்குச் சட்டம் செய்ய வேண்டுமென்று அவர்களை அன்னியர் யாரும் கட்டாயப் படுத்தவில்லை. தாங்களே சட்டம் செய்துகொண்டார்கள். தாங்களே நடத்தி வருகிறார்கள். சமீபத்தில் தான் அமெரிக்க அக்கிராசனப் பதவிக்குத் தேர்தல் நடந்தது. மதுவிலக்குச் சட்டத்தைக் கொஞ்சம் தளர்த்தலாமென்று சொன்னவர் பெருந் தோல்வி யடைந்தார். மதுவிலக்கைத் தீவிரமாய் ஆதரிக்கும் மிஸ்டர் ஹூவரே வெற்றி பெற்றார். என்? மதுவிலக்குச் சட்டத்தினால் நன்மை யில்லாவிடில் அந் நாட்டு ஜனங்கள் அதை என் ஆதரிக்க வேண்

டும்? தீமையான ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டிருப்ப... கள் என்ன மூடர்களா?

மற்றொரு விஷயம் கவனிக்கவேண்டும். அமெரிக்காவில் ம... விலக்குச் சட்டம் வெற்றிபெற வில்லையென்றும், இரகசியக் குடி அதிக... மாய் விட்டதென்றும் கூக்குரலிடுவது யார்? இத்தகைய செய்திகளை உலக மெல்லாம் பரப்பிப் பிரசாரம் செய்வது யார்? அந்தச் சட்டத்தை உடைக்க முயன்று திருட்டுக் குடியை வளர்ப்பவர்களே இத்தகைய பிரசாரமும் செய்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்துக்கு முன் அமெரிக்காவில் மது விற்பனைசெய்து கொள்ளை லாபம் சம்பாதித்து வந்தவர்களும், அமெரிக்காவுக்கு வந்தது நமக்கும் வருமோவென்று அஞ்சும் மற்ற தேசங்களிலுள்ள மதுவியாபாரிகளும், இவர்களிடம் ஏதேனு மொரு வழியில் லஞ்சம் வாங்கிய பத்திரிகைகளும், அரசியல் வாதிகளுமே இத்தகைய பிரசாரம் செய்துவருகிறார்கள். இவர்கள் மதுவிலக்குச் சட்டம் கூடாதென்று சொல்வது திருடர்கள் கூட்டங்கூடி "பாருங்கள், நாங்கள் சட்டத்தைமீறித் திருடத்தான் திருடுகிறோம். உங்கள் சட்டத்தினால் என்ன பயன்? ஆகையால் அதை ரத்து செய்துவிடுங்கள்" என்று கூறுவதுபோலவே யாகும்.

கடைசியாக ஒரு வார்த்தை. கலால் இலாகா உத்தியோகஸ்தர்கள் இதை நிச்சயமாய் அறியவேண்டும். கலால் இலாகா போய் அது சீக்கிரத்தில் மதுவிலக்கு இலாகாவாக மாறவே போகின்றது. அதற்குத் தகுதியாகுமாறு இப்போதிருந்தே அவர்கள் தங்கள் மனப் பான்மையை மாற்றிக் கொள்ளுதல் அவசியம்.



இந்த இரண்டு கோழிக் குஞ்சுகளும் ஒரே தாயின் குழந்தைகள். ஆனால் ஒன்றுக்கு தினந்தோறும் சில துளி மதுசாரம் கொடுத்து வந்தார்கள். அது எந்தக் குஞ்சு என்று சொல்ல வேண்டுமோ? வளர்ச்சி குன்றி மெலிவடைவது மதுசாரத்தினால் விளையும் பலன்களில் ஒன்று. மிருக ஜாதிகளைப் போலவே மனிதன் தேகத்திற்கும் மதுசாரம் தீங்கு இழைக்கிறது.

கறுப்பன் திருந்திய விதம்

[ஸ்ரீமான் கி. விஜயராகவன்]

கறுப்பன் எனது குத்தகைக்காரன். என் சொந்த கிராமத்திலிருந்த சுமார் பத்து எக்கர் நிலத்தை நான் அவனிடம் குத்தகைக்கு ஒப்படைத்திருந்தேன். கறுப்பன் நல்லவன்; நாணய முள்ளவன். இதனால் எனக்கு அவனிடம் விசேஷ மதிப்புண்டு. எனவே, கறுப்பன் குடியமுகி விட்டான் என்று அவனுக்கடுத்த வீட்டுத் தப்பிலி முத்திரியன் கூறியதை நான் எவ்விதம் நம்புவது? நீண்டகாலமாக தப்பிலி முத்திரியன் என் நிலங்களைக் குத்தகைக்குக் கேட்டுக்கொண்டிருந்தான். கறுப்பனை நான் நீக்கும் பொருட்டு இவன் அபாண்டமான பழிகளைச் சுமத்துகிறான் என்று அலக்ஷியமா யிருந்து விட்டேன்.

ஒருநாள் என்னைக் காணவேண்டிக் கறுப்பன் வந்தான். "என்னடா! எங்கு வந்தாய்?" என்றேன். அவன் "முத்துராஜ மகாநாடு கூடிற்று; அதற்கு வந்தேன். உங்களையும் கண்டு போகலாமென்று வந்தேன்" என்றான். நான் "என்னடா! நாங்கள் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறோம். எங்களுக்கே மகாநாடுகளும், அதன் தீர்மானங்களும் விளங்கவில்லை. அப்படி இருக்க உனக்கு என்ன மகாநாட்டில் தெரிந்தது? என்ன தீர்மானங்கள் செய்தார்கள்?" என்றேன். அவன் "பல தீர்மானங்கள் செய்தார்கள். முக்கியமாக சாதி முன்னேற்றத்தைப் பற்றியும், மதுவை விலக்கும்படியும் தீர்மானித்தார்கள்" என்றான். "ஆனால் குடியானவர்களுக்குக் கள்ளுத் தண்ணீர் இல்லாவிடில் வேலை நடப்பது கடினம்" என்று தனது அபிப்பிராயத்தையும் சேர்த்துக் கொண்டான். உடனே தப்பிலி முத்திரியன் சொன்னது எனக்கு ஞாபகம் வந்தது. கள்ளின் தீமையைப்பற்றி ஒரு பெரிய பிரசங்கம் செய்து அவனை அனுப்பினேன்.

காலை எழுமணி இருக்கும். நான் ஸ்நானம் செய்து கொண்டிருந்தேன். "ஐயையோ! நான் என்ன செய்வேன்! என் மகனைக் கெடுத்துப் போட்டானே! காளியாயி வந்து அவனை யெல்லாம் வாரிக்கொண்டு போகாதா" என்று ஒரு ஸ்திரீயின் குரல் கேட்டது. அந்த சமயத்தில் வாசற்புறத்தில் கோலமிட்டுக் கொண்டிருந்த என் வயதான தாயார் "என்னடி பாவி! வெள்ளிக்கிழமை நல்லநாளில் 'ஐயையோ' சத்தம் போடுகிறாய்! நீ நாசமாய்ப்போக!" என்று பதில் சத்தம் போட்டதையும் கேட்டேன்.

விரைவாக ஸ்நானம் முடித்து வாசற்புறம் சென்றேன். கறுப்பனின் தாய் பிச்சை முத்து புலம்பிக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

"எங்கு வந்தாய்? எதற்காகக் காலை வேளையில் கத்துகிறாய்?" என்று கேட்டேன்.

"ஐயையோ! என்னத்தைச் சொல்வேன்? ஊர்ப் பயல்கள் குடிக்கிற பழக்கம் கற்றுக்கொடுத்து விட்டார்கள். குடிக்கிறதும் வீட்டுக்கு

வந்து சட்டி பானைகளை உடைக்கிறதும், பெண்டாட்டியைச் ... தாங்க முடியவில்லை. இதற்கு நீங்கள் ஒருவழி செய்ய ... என்றாள்.

"கறுப்பனை நான் வரச் சொன்னேன் என்று சொல்" என்று ... அவளை அனுப்பிவிட்டு என் வேலைகளைக் கவனிக்கச் சென்றேன்.

இது நடந்த மூன்றாம் நாள் கறுப்பன் அவனது தோழனான சவரி முத்து என்பவனுடன் என்னிடம் வந்திருந்தான். சவரி முத்து என்பவனை நான் வெகு காலமாக அறிவேன். அவன் பெரிய குடிகாரன். இலவசமாகக் கிடைக்கும் பக்ஷத்தில் அவன் பீப்பாயை அப்படியே வயிற்றுக்குள் செலுத்த அஞ்சமாட்டான். குடிக்கே சொத்துக்களை அர்ப்பணம் செய்து ஆண்டியாகி நிற்பவன். குடி மயக்கத்தில் ஒருவனைப் பலமாக அடித்து அதன் பொருட்டு ஒரு வருடம் சிறைவாசம் செய்தவன். பின்பு ஒருநாள் அபரிமிதமாகக் குடித்துவிட்டுத் தள்ளாடிப் பாதையில் கிடக்க, அது சமயம் ஒரு மோட்டார் அவன்மீது ஏறி அதன் பயனாக, இடது கை முறிந்து கோணக் கையாய் விளங்குபவன்.

"என்ன ! முத்துராஜ மகாநாட்டுத் தீர்மானம் அமுலுக்கு வந்துவிட்டது போலிருக்கிறது" என்றேன்.

கறுப்பன் அதை அறிந்துகொண்டு "சாமி ஆணையாக நான் குடிப்பது கிடையாது" என்றான்.

அதற்குள் சவரிமுத்து "அந்த வழிக்குப் போகிறவன் கறுப்பன் அல்ல" என்றான்.

"எனக்கு எல்லாம் தெரியும்; யோக்கியனாயிருந்த நீ குடிப்பழக்கத்தினால் பொய் பேசக் கற்றுக்கொண்டாய். நல்லது, நீ மறுமுறை குடிப்பதாக என் காதில் விழுந்தால் நிலங்கள் தப்பிலி முத்திரியன் வசம் போய்விடும். ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று அதட்டி அனுப்பிவிட்டேன். பிறகு கேள்விப்பட்டதில் நாள்தோறும் குடியை அவன் விருத்தி செய்து வந்ததாகத் தெரிந்தது.

சிறிது காலத்திற்குப் பின்னர் கிராமத்திலிருந்து ஒருவன் வந்து, கறுப்பன் கைது செய்யப்பட்டிருப்பதாயும், ஜாமீனில் விடுவிக்க நான்தான் வரவேண்டும் என்றும் கூறவே, கிராமத்திற்குச் சென்று விசாரித்தேன். கறுப்பனும், சவரி முத்துவும் சேர்ந்து லேவாதேவி ஆறுமுகஞ் செட்டியாரிடம் ரூ. 1000 கடன் வாங்கி இருப்பதாயும், அதன் பொருட்டு இருவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருப்பதாயும் தெரிய வந்தது.

சிறைச்சாலை அதிகாரி இராஜரத்தினம் பிள்ளை எனது நண்பர். அவர் அனுமதி பெற்றுக் கறுப்பனைச் சிறையில் சென்று பார்த்தேன். திடீரெனக் காலில் விழுந்தான். "செய்ததெல்லாம் தப்பு, ஐயா! மன்னிக்க வேண்டும்" என்றான்.

"எதற்காக ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினாய் ?" என்றேன்.

"கடவுள் சாக்ஷியாகக் கூறுகிறேன். ஒரு தம்பிடி நான் கடன் வாங்கவில்லை. எல்லாம் பெரு மோசம். ஐயா தான் காப்பாற்றவேண்டும்" என்றான்.

பேச்சு உண்மையென்று தோன்றிற்று. "நடந்த விஷ... உள்ளது உள்ளபடி சொன்னால் என்னாலியன்ற வரை உனக்கு ... செய்கிறேன். ஒரு வார்த்தை பொய்யானாலும் பேசாது போய் ...வேன்" என்றேன்.

அவன் சொன்னதாவது:—"அப்படியே சத்தியமாய்ச் சொல்கிறேன். சவரி முத்துவுடன் சேர்ந்து நான் கெட்டுப் போனது உண்மைதான். பாவி எனக்குக் குடிப்பழக்கம் செய்வித்ததோடல்லாமல் இப்போது கல்லைத் தூக்கிப்போட்டுவிட்டான். ஒருநாள் என் கையில் காசில்லை. தான் பணம் கொடுப்பதாய்ச் சொல்லிச் சாராயக் கடைக்கு அழைத்துப் போனான். கணக்கில்லாமல் வாங்கிக் கொடுத்தான். ஐயோ! அந்தப் பாவியின் சூழ்ச்சியை யறியாமல் மோசம் போனேன். "சும்மா சாப்பிடு, பயப்படாதே" எனத் தூண்டினான். அசாத்திய போதையிலிருந்தேன். ஒரு கடுதாசில் கையெழுத்திட்டேன். வேறு ஒன்றும் தெரியாது. மறுநாள் காலையில் இதெல்லாம் கனவு கண்டது போலிருந்தது. சவரி முத்துவைக் கேட்டேன். 'வேறு ஒன்றுமில்லை. அது ஒரு சாக்ஷிக் கையெழுத்து' என்றான். இது நடந்து இரண்டு மாதமாயிற்று. நேற்று வாரண்டுடன் போலீஸார் வந்து என்னைக் கைது செய்தபோதுதான் உண்மை தெரிந்தது. என்ன செய்வேன்? அந்தப் பாவியால் கெட்டேன். நீங்களே காப்பாற்றவேண்டும். நீங்கள் வைத்த விளக்கு" என்று கூறிக் கதறினான்.

"கிராமத்துப் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிடாரி கோயில் வாசலில் குடிப்பதில்லை என்று ஆணை இட்டுக் கொடுப்பாயா? இல்லாவிடில் நான் ஒன்றும் செய்யமுடியாது" என்றேன். அவனும் அதற்கு இணங்கினான். என் சொந்த முச்சிலிகாவின் பேரில் அவனை ஜாமீனில்மீட்டு வந்தேன்.

விசாரணையின்போது கறுப்பன் குடிமயக்கத்திலிருந்த சமயம் பத்திரத்தில் கையெழுத்து வாங்கப்பட்ட தென்றும், லேவாதேவி செட்டியார் முன்னிலையில் கையெழுத்து வாங்கவில்லை என்றும் ருசுவாகவே, கறுப்பன் விடுதலை யடைந்தான். சவரி முத்துவுக்கு ஐந்து வருடக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. குடியனுக்குக் கடன் கொடுத்த செட்டியார் எங்கிருந்து பணம் வசூலிப்பது? பணம் போனதுதான்.

* * * *

அன்று முதல் கறுப்பன் கள்ளுக்கடைப் பக்கம் போவதில்லை. மாதா மாதம் மீந்த பணத்தை என்னிடம் கொடுத்து வருகிறான். மூன்று வருஷத்திற்குள் அவன் தொகை என்னிடம் ரூ. 500 ஆகிவிட்டது. அரை ஏக்கர் நன்செய் நிலம் அந்தத் தொகைக்கு வாங்கி நேற்றைய தினம் ரிஜிஸ்டர் ஆயிற்று. இப்பொழுது அவன் குடிகாரக் கறுப்பனல்ல; **மிராசுதார் கறுப்பன்.**

சர்க்கார் பிரசாரம்

சென்னை சர்க்காரின் ஆதரவில் நடந்துவரும் மதுவிலக்குப் பிரசாரத்தை "மிதக் குடிப் பிரசாரம்" என்று சிலர் எண்ணியும் சொல்லியும் வருகிறார்கள். இது சரியன்று. கடைகளை மூடாமல் சர்க்கார் பிரசாரம் செய்வது மோசடியே. ஆனால் நமக்குத் தெரிந்தவரையில் சில ஜில்லாக் கமிட்டிகளும் பிரசாரகர்களும் நல்ல வேலையே செய்து வருகிறார்கள். "மிதமாகக் குடியுங்கள்" என்று அவர்களில் யாரும் பிரசாரம் செய்ததாக இதுவரை நாம் கேள்விப் படவில்லை. "குடிக்க வேண்டாம்" என்றுதான் அவர்களில் அநேகர் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

அவர்களுடைய பிரசாரத்துக்கும் நம்முடைய பிரசாரத்துக்கும் என்ன வித்தியாச மென்றால், அவர்கள் "குடிக்க வேண்டாம்" என்று ஜனங்களுக்குச் சொல்வதோடு நிற்கிறார்கள். நாம் அத்துடன் "கடையை மூடுங்கள்" என்று சர்க்காருக்கும் சொல்கிறோம். அப்படி மூடச் செய்வதற்குக் கிளர்ச்சி செய்து வருகிறோம். ஒரு புறத்தில் கள்ளு சாராயக் கடைகளைத் திறந்து வைத்துக்கொண்டு, மற்றொரு புறத்தில் "குடிக்க வேண்டாம்" என்று பிரசாரம் செய்தல் பொருந்தாத காரியம் என்பதை எடுத்துக் காட்டுகிறோம். ஆனால் இது பிரசாரகர்களுடைய தவறன்று. அவர்கள் சர்க்கார் ஆதரவில் வேலை செய்தாலும் உண்மையாக மதுவிலக்குக்கு உழைத்தால் மிக்க நன்மை செய்யலாம்.

அவர்களும் முடிவில் நம்முடைய நிலைமைக்குத் தான் வந்தாக வேண்டும். "பிரசாரம் மட்டும் போதாது; கடைகளையும் மூடுங்கள்" என்று கூடிய விரைவில் அவர்கள் கேட்பார்க ளென்பது நமது நம்பிக்கை. அவர்களில் பலருடைய அநுபவம் இப்படித் தான் இருக்கிறது. அவர்கள் போடும் கூட்டங்களில் "சர்க்கார் ஏன் கடையை மூடக் கூடாது?" என்று ஜனங்கள் கேட்கிறார்கள். சர்க்கார் மதுவிலக்குக் கமிட்டியின் ஆதரவில் நடக்கும் பொதுக் கூட்டங்களில் கடைகளை மூட வேண்டுமென்று தீர்மானங்கள் நிறை வேறுகின்றன.

கடைசியில் சர்க்கார் செய்விக்கும் பிரசாரமும் நம்முடைய பிரசாரமாகவே முடியும். இதற்கு உதாரணம்: கடப்பை ஜில்லாவின் சர்க்கார் மதுவிலக்குக் கமிட்டியார் கள்ளுக்கடை, சாராயக்கடை எலமெடுக்கும் இடங்களில் சென்று பிரசாரம் செய்வதாகவும், இதன் பயனாக ஓர் ஊரில் கடை எலம் போகவில்லை யென்றும் செய்தி கிடைத்திருக்கிறது.

பிரசாரகர்கள் தீவிரமாக வேலைசெய்ய ஆரம்பித்து விட்டால் சர்க்கார் குறுக்கிட்டு அவர்கள் வேலையை நிறுத்தி விடலாம் அல்லது தடை செய்யலாம். அப்படிச் செய்தால் சர்க்கார் பிரசாரம் வெறும் ஏமாற்றமே என்பது தெளிவாய் விளங்கும்.

சில கடை மூடினார்கள்

சென்னை அரசாங்கத்தின் கலால் இலாகா கமிஷனர் காட்டரல் அவர்கள் திருச்செங்கோடு தாலூகாவிற்கு வந்து ஜனங்களை அபிப்பிராயம் கேட்டாரென்றும், குடியர்கள் உள்பட எல்லாரும் "கடைகளை மூடினால் பிழைப்போம்" என்று முறையிட்டார்களென்றும் மார்கழி மாத "விமோசன"த்தில் தெரிவித்திருந்தோம். இப்போது கலால் இலாகாவில் இது சம்பந்தமாக உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு இம் மூன்று தாலூகாக்களிலும் ஒவ்வொரு பகுதி அடங்கிய ஒரு சிறு பிரதேசத்தில் கள்ளு, சாராயக் கடைகள் எல்லாவற்றையும் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து மூடிவிட உத்திரவிட்டிருக்கிறார்கள். இந்த உத்திரவின்படி மொத்தம் 26 கடைகள் எடுபடும். அவைகளுக்கு விவரம் வருமாறு:—

தாலூகா	கள்ளுக்கடை	சாராயக்கடை
நாமக்கல்	மணியனூர்	மணியனூர்
ராசிபுரம்	ஏழூர்	ஏழூர்
	கரடிப்பட்டி	குருசாமிப்பாளையம்
	உடுப்பம்	ஓலைப்பட்டி
	சர்க்கார் நாட்டாமங்கலம்	வேனந்தூர்
	பிள்ளாநல்லூர்	
	புதூர்	
	ஓலைப்பட்டி	
	அலவாய்ப்பட்டி	
	மூடியம்பட்டி	
	வேனந்தூர்	
	பாச்சல்	
திருச்செங்கோடு	திருச்செங்கோடு (இரண்டு கடை)	திருச்செங்கோடு
	சித்தளந்தூர்	சித்தளந்தூர்
	மோழிப்பள்ளி	கவுண்டம்பாளையம்
	உஞ்சனை	
	கவுண்டம் பாளையம்	

கூரை ஒழுகிறது

இது வட அமெரிக்கா கண்டத்தின் படம். கீழேயுள்ளது அமெரிக்க ஐக்ய நாடு. இந்நாட்டில் தான் பூரண மதுவிலக்குச் சட்டம் செய்திருக்கிறார்கள். மேலே யிருப்பது பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்தைச் சேர்ந்த கனடா தேசம். அங்கே மதுவிலக்குச் சட்டம் இல்லை. அமெரிக்காவில் திருட்டுக் குடியைப் பற்றிச் செய்திகள் வருகின்றன வல்லவா? பக்கத்திலுள்ள கனடா நாட்டில் குடி ஒழியாதது தான் அதற்குக் காரணம். மதுவிலக்குக்கு விரோதிகள் இதைப் பிரமாதமாக்கிச் சொல்கிறார்கள். கனடாவில் நடக்கும் மதுபானத்தைப் பெருமழை என்று கொண்டோமானால், அமெரிக்காவில் நடக்கும் திருட்டுக் குடியைக் கூரையிலுள்ள பொத்தல்வழியாக ஒழுகும் நீர் என்றே சொல்ல வேண்டும்.

கனடாவில் மதுபானம் ஒழிந்தால் அமெரிக்காவில் திருட்டுக் குடி தானே நின்றுவிடும். ஆனால் அதுவரையில் காத்திருக்க முடியுமா? கூரையிலுள்ள துவாரங்கள் அடைபட்டாலும் ஒழுகுவது நின்றுபோய் விடுமல்லவா? அதற்காகத்தான் அமெரிக்க அரசாங்கத்தார் கையில் விளக்குடன் கூரையில் துவாரங்கள் உள்ள இடத்தைத்தேடி அடைக்க முயல்கிறார்கள். இந்த முயற்சியின்போது அந்த துவாரங்களைப் பெரிதுபண்ண முயலும் மது வியாபாரிகளுடன் சில சமயம் போராட்டம் உண்டாகிறது. இதைப்பற்றிய செய்திகளைத் தான் மதுவிலக்குக்கு விரோதமான பத்திரிகைகள் மிகைப்படுத்திப் போடுகின்றன.

நீங்களே சொல்லுங்கள். கனடாவிலுள்ளது போன்ற ஏராளமான பகிரங்கக்குடி நல்லதா? அல்லது அமெரிக்காவிலுள்ளது போன்று கொஞ்ச காலத்திற்குச் சொற்பமான திருட்டுக் குடி நல்லதா?

முதல் நிபந்தனை

"ஜன நாயகத்துக்கு அவசியமான ஒற்றுமை நாட்டில் இல்லை; ஆகையால் இந்தியாவுக்கு அரசியல் சுதந்திரம் கொடுக்க முடியாது" என்று ஆங்கில அரசாங்கத்தாரும் இராஜப் பிரதிநிதியும் சொல்லிவருகிறார்கள். அதற்கு மகாத்மா கூறிய பதிலாவது:—"ஒற்றுமை இல்லையென்பது எனக்குத் தெரியும்; வேற்றுமைக்குக் காரணம் அன்னிய அரசாட்சியே; பொறுப்பும் சுயாட்சியும் ஏற்பட்டால் வேற்றுமைகள் விரைவில் தொலையும். ஆனால் ஒற்றுமையுண்டாக்கிக் கொள்ளும் வரையில் அரசியல் சுதந்திரம் கொடுக்கமாட்டோமென்று நீங்கள் சொன்னால், சாதாரண ஜனங்களுக்கு நன்மை தந்து நாட்டின் வறுமையைக் குறைக்கக்கூடிய சில சீர்திருத்தங்களாவது என் உடனே செய்யக்கூடாது? உங்களுடைய நல்லெண்ணத்தை நிரூபிக்குமாறு இந்தச் சீர்திருத்தங்களை நீங்கள் உடனே செய்து கொடுத்தால் உங்களுடைய வாக்குறுதிகளை நம்புவதற்கு இடமிருக்கும்" என்கிறார். இத்தகைய பதினொரு முக்கியமான சீர்திருத்தங்களையும் மகாத்மா குறிப்பிட்டிருக்கிறார். அவை வருமாறு:—

(1) பூரண மதுவிலக்கு செய்யவேண்டும்.

(2) நாணய மாற்று விகிதம் ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் ஆறு பென்ஸாக விருப்பதை ஒரு ஷில்லிங் நாலுபென்ஸாக மாற்றவேண்டும்.

(3) நிலவரியைப் பாதியளவுக்குக் குறைக்கவேண்டும்.

(4) உப்புவரியை நீக்கவேண்டும்.

(5) இராணுவச் செலவை உடனே பாதியாக்கி விடவேண்டும்.

(6) வருமானக் குறைவுக்குத் தகுந்தாற்போல் பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைப் பாதியாகவோ இன்னும் குறைவாகவோ ஆக்கவேண்டும்.

(7) சுதேசித் துணித் தொழிலைக்காப்பாற்ற அன்னியத்துணிக்கு வரி போட வேண்டும்.

(8) கடலோர வியாபாரத்தை சுதேசக் கப்பல்களே நடத்தச் சட்டம் செய்யவேண்டும்.

(9) கொலைக் குற்றத்திற்காக சாதாரண கோர்ட்டுகளில் தண்டிக்கப்பட்டவர்களை யல்லாமல் மற்ற அரசியல் கைதிகளை யெல்லாம் விடுதலை செய்ய வேண்டும்.

(10) இரகசியப் போலீஸ் இலாகாவை எடுத்து விடவேண்டும்; அல்லது அதைப் பொதுஜன அதிகாரத்தின் கீழ் கொண்டுவரவேண்டும்.

(11) தற்காப்புக்காகப் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு ஆயுதம் வைத்துக்கொள்ளும் உரிமை அளிக்கவேண்டும்.

இந்தப் பதினொரு நிபந்தனைகளில் முதல் நிபந்தனையாகப் பூரண மதுவிலக்கை மகாத்மா காந்தி குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

பழைய கதையே

சூரத்ஜில்லாவில் மதுவிலக்குப் பிரசாரம் தீவிரமாக நடைபெறு வதைக் குறித்துச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். இந்த நல்ல தொண்டில் ஈடுபெட்டிருப்பவர்களை மேற்படி ஜில்லாவின் கலெக்டர் எச். வி. பிரஹாம் என்பவர் எச்சரிக்கை செய்திருப்பதாய் இப்பொழுது செய்தி கிடைத்திருக்கிறது. மதுவிலக்குத் தொண்டர்களால் மிகவும் தொல்லை விளைவதாகக் கள்ளுக்கடைக் குத்தகைக்காரர்கள் 53 பேர் மனுச்செய்து கொண்டதின்மேல் கலெக்டர் மேற்படி எச்சரிக்கை செய் திருக்கிறாராம். அதன் சாராம்சமாவது:—"கள்ளுக்கடைக்குப் போகிற வர்களைத் தடைசெய்வது, அவர்களைப் பயமுறுத்துவது, அடிப்பது, அவர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி அபராதம் வசூலிப்பது முதலிய சட்ட விரோதமான காரியங்கள் சில விடங்களில் நடப்பதாய்த் தகவல் கிடைத்திருக்கிறது. இத்தகைய காரியங்களைச் செய்பவர்கள் உடனே அவற்றை நிறுத்திவிட வேண்டும். இல்லாவிடில் அவர்கள்மீது நட வடிக்கை தொடரப்படும்."

இது பழைய கதையே யென்று சொல்லவேண்டியதில்லை. 1921-ம் வருஷத்தில் ஒத்துழையாமை இயக்கம் தீவிரமாய் நடந்தபோதும் சர்க் கார் இப்படித்தான் செய்தார்கள். அச்சமயம் தேசமெங்கும் ஒரு பெரிய தர்ம உணர்ச்சி தோன்றி மதுபானத்தை ஒழிப்பதற்குத் தீவிர முயற்சி நடந்தது. சாதிக்கட்டுப்பாட்டினாலும், சாத்வீக மறியலினாலும் ஜனங்கள் கள்ளை நிறுத்த முயன்றார்கள். உடனே சர்க்காரின் அடக்குமுறை ஆரம்பமாயிற்று. பலாத்கார மென்பதைச் சிறிது மறியாத மதுவிலக்குத் தொண்டர்கள் பலர் சிறையிலிடப் பட்டார்கள்.

மறுபடியும் அதே நிலைமைதான் இப்போது சூரத்தில் ஏற்பட்டிருக் கிறது. சென்ற வருஷத்திலிருந்து அந்த ஜில்லாவில் மதுவிலக்குக் கிளர்ச்சி பலமாய் நடந்து வருகிறது. கிளர்ச்சி சிறிது பயன் கொடுக்க ஆரம்பிக்கவே எச்சரிக்கையும் பிறந்துவிட்டது. பலாத்காரம், பயமுறுத் தல், கலவரம் என்பதெல்லாம் வெறுங் கதை. இவைகளைக் குறித்துப் புகார் செய்தவர்கள் யார்? பலாத்காரத்துக் குள்ளானவர்கள், கஷ்டப்பட் டவர்கள் அல்ல; கள்ளுக்கடைக் குத்தகைக்காரர்கள்!

ஆனால் அதிகாரவர்க்கத்தின் பயமுறுத்தல்களுக்கும், பலாத்காரத் துக்கும் ஜனங்கள் அஞ்சிய காலம் மலையேறிவிட்டது. சட்ட விரோத மான உத்திரவுகளுக்கும், எச்சரிக்கைகளுக்கும் பயந்து தேசத்தொண்டர் கள் சும்மாயிருக்கப் போவதில்லை. மதுவியாபாரம் ஒழிந்தே தீரவேண்டும்.

இப்போது சூரத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமைதான் விரைவில் தேசமெங்கும் ஏற்படும். உண்மையில் மதுவிலக்கு இயக்கம் பலன் தரத் தொடங்கும்போது சர்க்காரின் கலால் வருமானம் குறையும். அவர்கள் அடக்குமுறை கைக் கொள்வார்கள். இப்பெரிய தர்மக் கிளர்ச்சியில் அநு தாபமுள்ளவர்கள் அனைவரும் அது சமயம் ஒற்றுமையாக நின்று அதிகார வர்க்க அநீதியை எதிர்க்கவேண்டும்.

கி ஞ்சல்

லாகூரில் நடந்த மதுவிலக்கு மகாநாட்டின் தீர்மானத்தையும், அதன்மேல் மகாத்மாகாந்தி விடுத்த வேண்டுகோளையும் அனுசரித்து, பீஹார் மாகாணத்தில் பாட்ந நகரில் வெளியாகும் "ஸர்ச்லைட்" என்னும் பத்திரிகையில் இனிமேல் மதுபான விளம்பரங்கள் போடுவதில்லையென்று அதன் சொந்தக்காரர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * * *

தமிழ்நாட்டின் பல இடங்களிலும் பல அன்பர்கள் மதுவிலக்குக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். "விமோசன"த்துக்குச் சந்தாதார் சேர்த்துக்கொடுத்தும், தனிப்பிரதிகள் விற்பனை செய்தும், தாங்களே ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் வாங்கி விநியோகித்தும் உதவி செய்யும் அன்பர்கள் எல்லாருக்கும் நமது மனமார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

* * * *

பின்வரும் நண்பர்கள் அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேர்ந்திருக்கிறார்கள்:—

1.	ஸ்ரீமான்	என். இராமச்சந்திரன்	இரங்கூன்
2.	,,	வஸந்தமால் ஹீராபாத்	ஹைதராபாத் (சிந்து)
3.	,,	கே. வி. இராமசாமி ஐயர்	மதுரை
4.	,,	ஜி. வி. முத்துசாமி செட்டியார்	,,
5.	,,	கொ. அ. பெத்தராஜா	இராஜபாளையம்
6.	,,	கே. டி. பால்	சேலம்
7.	,,	டி. பி. கைதான்	கல்கத்தா
8.	,,	பி. கனோரியா	,,
9.	,,	எச். பி. பகாரியா	,,
10.	,,	ஜி. டி. லோயால்கா	,,
11.	,,	ஆர். கே. கனோரியா	,,
12.	,,	திரு. வி. கலியாணசுந்தர முதலியார்	சென்னை.
13.	,,	எஸ். முத்துசாமி	மாம்பலம்
14.	,,	பரலி. சு. நெல்லையப்பர்	சென்னை
15.	,,	எஸ். எஸ். வாஸன்	சென்னை

* * * *

பூரண மதுவிலக்குக் கொள்கையை ஒப்புக்கொண்டு வருஷம் ஐந் ...ப் சந்தா கட்டுபவர்கள் மதுவிலக்குச் சங்கத்தில் அங்கத்தினராய் ...ராம். அங்கத்தினர்களுக்கு ஆங்கிலத்திலுள்ள "Prohibition ...கையாவது, "விமோசனம்" பத்திரிகையாவது, அவர்கள் வி... ...ல் தனிச் சந்தா இன்றி அனுப்பப்பட்டு வரும்.

அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் போஷகர்களாக இட யில் ஆக்ராவைச் சேர்ந்த ஸ்ரீமான் பாஸுக், சேத் ஜம்னுலால் ப சென்னை ஸ்ரீமான் ராமநாத் கோ ம்மூவரும் இருந்து வந் கள். இப்போது மதுரை ஸ்ரீமான வைத்திநாதய்யர் அவர்களு போஷகர் ஆகியிருக்கிறார்கள்.

* * * *

சென்னை இளைஞர் சங்கத்தார் (லீக் ஆப் யூத்) செய்துவரும் மது விலக்குத் தொண்டைப் பற்றி நாம் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். சென்ற வருஷத்தில் சென்னையிலுள்ள சேரிகளுக்கு இவர்கள் அடிக்கடி சென்று படங்கள், பஜனை, பிரசங்கம் இவை மூலம் மதுவிலக்குப் பிர சாரம் செய்ததுடன், தமிழ் நாட்டில் ஆங்காங்கு நடந்த மகா நாடுகள், திருவிழாக்கள் இவைகளை யொட்டி மதுவிலக்குக் கண்காட்சிகள் அமைத் தும் சிறந்த வேலை செய்துவந் திருக்கிறார்கள். இவ்வாண்டிலும் அவர் கள் இந்த நல்ல தொண்டைத் தீவிரமாக நடத்தி வருவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

* * * *

அகில இந்திய மதுவிலக்குச் சங்கம் அரசியல் கட்சிகளின் சம்பந்த மின்றித் தனித்து நின்று வேலைசெய்வது. அரசியலில் எந்தவித அபிப் பிராய முடையவர்களும் இதில் சேர்ந்து மதுவிலக்குத் தொண்டு செய்ய லாம். காங்கிரஸ் மகாசபையின் ஆதரவிலும் இவ் வருஷத்தில் தீவிர மாக மதுவிலக்கு வேலைசெய்யத் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. புது வருஷத்திற்கு நியமிக்கப்பட்ட காங்கிரஸ் மதுவிலக்குக் கமிட்டியின் அங்கத்தினர் வருமாறு :—

டாக்டர் எம். ஏ. அன்சாரி
ஸ்ரீமான் வல்லபாய் படேல்
சேத் ஜம்னுலால் பஜாஜ்
ஸ்ரீமான் இராஜேந்திர பிரஸாத்
" ச. இராஜகோபாலாச்சாரியார் (காரியதரிசி)

* * * *

நாளுக்குநாள் குடி பெருகிவருகிறது. திருட்டுக்கள் குற்றங்களும் பெருகிவருகின்றன. ஆனாலும் சர்க்கார் அறிக்கைகளில் "கலால் நிர் வாகம் திருப்திகரமாய் நடந்து வருகிறது" என்றே எழுதுகிறார்கள். "சிகிச்சை வெற்றியடைந்தது, ஆனால் நோயாளி இறந்துபோனான்" என்று வைத்தியர் சொல்வதைப் போலிருக்கிறது சர்க்கார் காட்டும் திருப்தி.

* * * *

"மதுபானத்தைப் பகுத்தறிவுடன் உபயோகித்தால் கெ ல்லை. அறிவின்றி மிதமிஞ்சிக் குடியில் மூழ்கினால் தான் தீ று மிதக்குடி வாதிகள் சொல்கிறார்கள். "பகுத்தறிவுடன் கித்தால் கெடுதல் இல்லை" என்றே வைத்துக் கொள்வோம். எப்படி சாத்தியம்? மதுபானம் முதலில் தாக்கி அழிப்பது

யல்லவா? எனவே ... வுடன் குடிப்பதென்பது
... காலுமில்லாத நொ... ம் ஓடிக் கெலித்தான்"
...தைப் போன்றதாகும்.

*　　*　　*　　*

"இந்தியாவின் அரசாங்க... இந்திய மக்கள் கையில் இருந்தால் அவர்கள் சில மாதகாலத்தில் நாட்டிலிருந்து குடியை யொழித்து விடுவார்கள். அமெரிக்காவைவிட இந்தியாவுக்கு மதுவிலக்கில் அதிக நம்பிக்கை யிருக்கிறது."

—பூஸிக்கால் ஜான்ஸன்.

*　　*　　*　　*

"போதனமுறை நல்லதே. நாகரிகமடைந்த தேசங்களில் போதனமுறை அவசியந்தான். ஆனால் ஓர் அரசாங்கம் மது வியாபாரத்துக்கு லைஸென்ஸ் கொடுத்து அதைக் காப்பாற்றி வருமானால், அது ஜனங்களுக்குக் குடிக்கும்படி போதனை செய்வதே யாகும். மதுவியாபாரிகள் வேண்டுவது இதுதான்."

—பூஸிக்கால் ஜான்ஸன்.

*　　*　　*　　*

அமெரிக்காவில் மதுவிலக்குப் பிரசாரத்துக்காக எவ்வளவு பணம் செலவழிக்கிறார்களோ அதைப்போல் ஐந்து மடங்கு பணம் மதுவிலக்குக்கு விரோதிகள் அதை எதிர்க்கும் பிரசாரத்தில் செலவழிக்கிறார்களாம். மதுவிலக்குச் சட்டத்துக்கு முன்னால் மதுபானக் கடை... வேலைபார்த்த 30,000 பேர் தலைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1—8—0 ... படி தீயபிரசாரத்திற்குக் கொடுத்து வருகிறார்களாம். இதைத்தவிர ... னம் மது வியாபாரம் செய்தவர்களும், ஐரோப்பாவில் தற்போதுள்ள ... வியாபாரிகளும் இதற்காக ஏராளமான பணம் செலவு செய்கிற... மதுவிலக்குக்கு விரோதமாக வரும் செய்திகளை விரைவில் ந... வேண்டாம்.

*　　*　　*　　*

மதுபானத்துக்கு வகாலத்து பெற்றுப் பேசும் பெரிய ... கேள்வி கேளுங்கள். அவர்களுடைய வீட்டுக்குப் பக்க... ...யக்கடை வைக்கச் சம்மதமா? என்று வினவுங்கள் ... ...டவே கூடாது" என்பார்கள். அவர்களுக்கு அது தீ... ...வர்களுக்கும் கெடுதல் அல்லவா?

*　　*　　*

...பெயர் பெற்ற பௌதிக சாஸ்திரியான ஸர் சி. வி. ... ...லாசாலையின் பட்ட மளிப்பு விழாவில் பேசியபோ... ... பின்வரும் போதனை செய்தார்:—"நாம் சோர்... ... தடைகளை எதிர்த்து நின்று போராடி வெற்... ...வண்டும். இந்தியக் கைத்தொழிற் பொருள்க... ...காலும் அவைகளையே விரும்பி உபயோகிக்க ... ... மேனாட்டின் ஆடம்பர வாழ்க்கை...

களையும் மேற்கொள்ளலா சாரமும், புகையிலை
கள் அறிந்துள்ள விஷங்க கக் கொடியவை என்ப
எப்போதும் மறக்கக் கூட

* * * *

ஜனநாயகம் நன்கு நடைபெ ற்கு மதுவிலக்கு இன்றியமை
யாதது என்று முன்னம் ஒருமுறை எழுதியுள்ளோம். அமெரிக்காவி
மிகப் பெரிய நகரங்களில் ஒன்றாகிய சிகாகோ நகரில், முனிசிபல் தேர்த
முறையைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நியமித்தார்கள். அக்கமிட்டியா
தங்கள் அறிக்கையில் சொல்லி யிருப்பதாவது :—"ஸ்திரீகளுக்கு வா
குரிமை யளித்ததும், பகிரங்க மதுவிற்பனை ஒழிந்ததும் தேர்தல் முறை
யில் மிக்க நன்மை செய்திருக்கின்றன. முன்னர் தேர்தல்களில்
போதெல்லாம் பலாத்காரமும், கூலித்தனமும், மோசமும் அதிகமாயிரு
தன. அவை இப்போது பெரிதும் குறைந்துபோயின. முன்போலின்
இப்போது தேர்தலுக்கு மிக்க மரியாதை ஏற்பட்டிருக்கிறது. கூடியவிரை
வில் அவை முற்றிலும் கண்யமாக நடைபெறுமென்பதில் சந்தேகமில்லை.

* * * *

அமெரிக்காவில் மதுவிலக்கு உத்தியோகஸ்தர்கள் தங்கள் கட
மையை நிறைவேற்றுங்கால் குற்றவாளியைச் சுட்டுக் கொன்றதாய் எ
போதேனும் செய்தி வந்தால், மதுவிலக்கு விரோதிகள் அதைப் பிரம
படுத்திப் பிரசுரிக்கிறார்கள். ஆனால் உண்மை யென்னவென்று பார்ப
போம். 1920-ம் வருஷத்திலிருந்து 1929-ம் வருஷம் வரையில், ஒன்
வருஷகாலத்தில், மதுவிலக்கு உத்தியோகஸ்தர்களால் கொல்லப்
வர்கள் மொத்தம் 147 பேர். ஆனால் இப்படிக் கொல்லப்பட்டவர்
எல்லாம் பரம சாதுக்கள் என்று நினைக்கவேண்டாம். அவர்கள் எல்
கொலைக்கஞ்சாத பொல்லாத மூர்க்கர்கள். மேற்சொன்ன காலத்
வர்கள் கையால் மதுவிலக்கு உத்தியோகஸ்தர்கள் 57 பேர் செத்
ாயிருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். உத்தி
ர்கள் கொன்ற ஒவ்வொரு தடவையும் அவர்களை அரசாங்கத்
கிசெய்து விசாரணை நடத்தினார்கள். (நமது நாட்டில்போல
வில் அதிகாரிகள் ஜனங்களைச் சுட்டுவிட்டு எளிதில் தப்
இரண்டே தடவைதான் உத்தியோகஸ்தர்கள் அவசிய
ல்லாதபோது சுட்டதாக ஏற்பட்டது. மற்ற எல்லா
ர் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவே அவர்கள் குற்றவா
கள் என்று தீர்ப்பாகி விடுதலை யடைந்தார்கள்.

* * *

திய மதுவிலக்கு சங்கத்தின் கிளைச் சபைகள் தமிழ்
ங்களில் ஏற்பட்டிருக்கின்றன. காஞ்சீபுரத்தில்
அவர்களின் முயற்சியினால் ஒரு கிளைச் சங்கம் ஸ்த
வேலை நடந்து வருகிறது. காஞ்சீபுரத்திலுள்ள ப
க கிளைச் சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேர்ந்திரு
ாகச் சென்ற மாதம் இராமநாதபுரம் ஜில்லா
. சீனிவாசய்யங்காரின் முயற்சியினால் ஒ
இவர்களும் நல்ல வேலை செய்து